# அருள்ஒளி

1ம் ஆண்டு நிறைவு

சிறப்பு மலர்





துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை.

2003

மலர் 13

ஆவணிமாத இதழ்







# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்
**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

**2003 சுபானு வருடம் ஆவணி மாதம்**

வெளியீடு :
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, இலங்கை.**

**மலர் 13**


## அருள் ஒளி மலருக்கு அகவை ஒன்று பூர்த்தி

*தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அறப்பணி வரிசையில் அருளொளி வெளியீடும் ஒன்றாகும். ஆன்மீகக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக இம்மலர் வெளியிடப்பெற்று வருகிறது. எங்கள் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்கள் '' அருள் ஒளி '' என்ற நாமத்தைச் சூட்டி இப்பணியை ஆரம்பித்துவைத்தார்கள். கடந்த ஒருவருட காலமாக காலம் தவறாது அருள்ஒளி பிரகாசித்த வண்ணம் உள்ளது. ஈழநாட்டில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களுக்கும் மாதாமாதம் அருள்ஒளி சென்று பலரது வாழ்த்தை எமக்குப் பெற்றுத் தந்துள்ளது. சென்ற ஆண்டு ஆவணித் திருவோண நன்நாளிலே '' துர்க்காபுஷ்கரணி '' எனும் ஆலயத் தீர்த்தமண்டப முன்றிலில் இம் மலரினை வெளியிட்டோம். காலம் வேகமாகக் கடந்துவிட்டது. அருள் ஒளியின் வாசகர்கள் ஆயிரமாயிரமாகப் பெருகிவிட்டனர். அருள்ஒளி சுடர்விட ஆரம்பித்தபோது பல அறிஞர்கள் எம்மை ஊக்கப்படுத்தி வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்தனர். நாடறிந்த நல்லறிஞர்கள் தரமான ஆக்கங்களை எமக்குத்தந்து உற்சாகப்படுத்தினர். வாசகர்கள் தம் வளமான கருத்துக்களைத் தொடர்ந்து தெரியப்படுத்தினர். ஓராண்டில் அருள்ஒளி யூடாக நாம் பெற்ற அனுபவங்கள் பல. அருள்ஒளி தாமதமாகக் கூடாது என்பது எங்கள் அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் கண்டிப்பான உத்தரவு. இத்தகைய சூழலில் அருள்ஒளி அற்புத*

மாய் வெளிவந்த வண்ணம் உள்ளது. இன்று ஈழத்திலே போர்ப்புயல் ஓய்ந்து சமாதானத்தென்றல் வீசத்தொடங்கியிருந்தாலும் போரின் வடுக்கள் இன்னமும் மக்கள் உள்ளத்தில் ஆறவில்லை. இந்நிலையில் மக்களை ஆற்றுப்படுத்துவதற்கு ஆன்மீகச் செய்திகள் அவசியமாகும். இந்துமதம் பற்றி ஏராளமான நூல்கள் இதுவரை வெளிவந்த போதிலும் இன்று வாழும் மனிதன் கற்று உணரக்கூடிய நூல்கள் வெளிவருவது மிகக்குறைவு. எனவே யதார்த்த உலகிற்குப் பொருத்தமான வாழ்வியலுக்கு உகந்த ஆன்மீகச் செய்திகளை வெளியிட வேண்டுமென அருளொளி ஆதங்கங் கொள்கிறது. புராதன நூல்களில் காணப்படும் அரிய கருத்துக்களை இன்றைய சமூகம் விளங்கிக்கொள்ளத்தக்க வகையில் புதுமையாய் வழங்கவேண்டியது ஆக்கவியலாளரின் கட்டாய கடனாகும். அருள்ஒளி அத்தகைய எதிர்பார்ப்புடன் வருங்காலத்தில் வலம் வரும் என்பதில் ஐயமில்லை. ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல'' என்பது சங்க இலக்கிய மரபு. இன்று ஆன்மீகச் செய்திகளுடாக கருணையை வளர்க்க வேண்டியது எமது பிரதான கடமையாகும். பஞ்சமாபாதகங்கள் நாம் வாழும் உலகில் மலிந்து கொண்டிருக்கிறது. இந்நிலையை மாற்றி வாழ்வின் நெறிமுறைகளை சமூகம் கற்றுக்கொள்வதற்கு சமயம் வழிகாட்ட வேண்டும். புண்ணிய பாவங்களை மக்கள் உணர்ந்துகொள்வதற்கு அறிவுசார் பெரியோர்கள் வழிகாட்ட வேண்டும். கருணையுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்கு அருள்ஒளி அனைவரையும் வரவேற்கிறது. வரலாறுகள், மூத்தோரின் அறிவுரைகள் இளையவர்கள் நெறிமுறையில் வாழ்வதற்கு உகந்த அனுபவங்களாகும். எனவே நல்ல அனுபவங்களைப் பகிர்வதற்கு அருள்ஒளியின் கதவுகள் என்றும் அகலத் திறந்திருக்கும். மழலைச் செல்வங்கள் மாசற்ற மனிதர்களாக வாழ்வதற்கு சிறுவர் பகுதியை அருள்ஒளி உருவாக்கியுள்ளது. அருள்ஒளி தவழ்ந்து எழுந்து தரணியில் நிமிர்ந்து நடைபோட வாசகர்களின் வளமான ஆதரவு என்றும் கிடைக்கவேண்டும். அருள்ஒளி அகவை ஒன்றைப் பூர்த்தி செய்யும் இந்நாளில் அதன் வாழ்விற்கு உறுதுணை செய்த அனைவரையும் நன்றியோடு வாழ்த்தி வணங்குகிறோம். எல்லாம்வல்ல துர்க்கை அம்பாளின் திருவருளால் அருள்ஒளி என்றும் அணையா விளக்காய் இவ்வவனியில் நல்லொளி பரப்ப வேண்டுமென வேண்டி நிறைவு செய்கிறோம்.

''உயிரெனத் தோன்றி யுணவுகொண்டே வளர்ந்
தோங்கிடும் சக்தியை ஓதுகின்றோம்
பயிரினைக் காக்கும் மழையென எங்களைப்
பாவித்து நித்தம் வளர்க்கவென்றே''

— பாரதியார்

**ஆசிரியர்**

உ

கிரியாதுரந்தரர்

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

உலக மக்களின் மேம்பாட்டிற்காக ஆலயங்கள் ஆற்றிவரும் சேவை மகத்தானது. காட்டு மிருகங்களுடன் வாழ்ந்து வந்த மனிதனை நல்வழிப்படுத்தி நற்சிந்தனை உருவாக்கிய பெருமை எல்லாச் சமயங்களையும் சார்ந்தது.

இந்து சமயமும் காலத்திற்குகாலம் அவதாரபுருஷர்களையும் ஞானிகளையும் ஆற்றல் மிகுந்த அறிவாளிகளையும் உருவாக்கி மக்களுக்கு வழிகாட்டி வந்துள்ளது. இவர்களால் நிறுவப்பட்ட ஆதீனங்கள், மடாலயங்கள், நிறுவனங்கள், தேவஸ்தானங்கள் யாவுமே சமுதாய வளர்ச்சியில் முக்கிய பங்கை வகிக்கின்றன.

இந்த வகையில் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சமுதாயப்பணியினுடைய வளர்ச்சி வருடாவருடம் வளர்ந்து வருவதை நோக்கலாம். தேவஸ்தானத்தால் சமய அறிவையும், சமயத்தில் உள்ள முக்கிய விழாக்களின் பெருமைகளையும் தாங்கிய வெளியீடாக வருகின்ற அருள்ஒளி சஞ்சிகை தனது ஒருவயதை (வருடத்தை) பூர்த்தி செய்கின்றது. இச்சஞ்சிகை சமயத்திற்கும், தமிழிற்கும், பண்பாட்டிற்கும் தொண்டாற்றி மென்மேலும் வளர்ச்சி அடையவும், இதைச் சார்ந்த தேவஸ்தானமும், ஆசிரியாகுழுவினரும் நற்பணி செய்ய என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும், ஆசியையும்கூறி துர்க்காதேவியை பிரார்த்தனை செய்து அமைகின்றேன்.

சர்வே ஜெனகா சுகினோ பவந்து

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
(பிரதம குரு)

உ

# "அருள் ஒளி" ஓராண்டுப் பூர்த்தி விழா

# வாழ்த்துரை

தெல்லிப்பழையில் அருள் ஓங்கும் ஆனந்தவல்லியாக விளங்குபவள் துர்க்காதேவி. இப்பெருமாட்டியின் அருட் கருணையினால் பலவித எழுச்சிகளை தொடர்ந்து இவ்வாலயம் கண்டிருக்கிறது. கடந்த நாற்பது ஆண்டுகள் தொடர்ந்து காணப்பட்ட எழுச்சியில் கடந்த ஒரு வருடமாக "அருள் ஒளி" என்ற செய்தித்தாள் வெளிவருவது குறிப்பிடத்தக்க தாகும். எமது மண்ணில் ஆட்சி தருகின்ற புனித திருத்தலங்களின் வரலாறும் வழிபாடும் அவ்வக் காலங்களில் அருள் ஒளியில் வெளியிடப் பட்டு வந்துள்ளன. அத்துடன் ஆன்மீகத்தை வளர்க்கும் செய்திகளும் சைவ சமயத்தை மாசுபடுத்தும் மிருக பலியை எதிர்த்துக் கட்டுரைகளும் இடம்பெற்று வந்தமை வரவேற்கத்தக்கதாகும். மாணவர்கள் மத்தியில் இடம்பெறும் குறைநிறைகளை சுட்டிக் காட்டி வெளியிடப்பட்ட கட்டுரை களையும் வாசகர்கள் படித்துள்ளார்கள். சஞ்சிகை ஒன்றுக்கு ரூபா நாற்பது செலவினம் ஏற்பட்டாலும் வாசகர்கள் அனைவரும் பயன் பெற வேண்டும் என்பதற்காக ரூபா இருபதாக அனைவரும் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளோம். தரமான செய்திக் குறிப்புகளும் இவ்விதழ் மூலம் வெளியிடப்படுகிறது. ஏறக்குறைய நூறு பிரதிகள் அயல் நாடுகளில் பணி புரியும் அம்பாள் அடியவர்களுக்கு மாதம் தோறும் அனுப்பி வைக்கிறோம். எனவே இதழ் ஆசிரியர்களுக் கும், அச்சிட்டு வெளியிடும் திருமகள் அழுத்தகத்தாருக்கும், அட்டைப் பதிப்பு செய்து மாதந்தோறும் உதவும் பிள்ளையார் அச்சக நிறுவனத் துக்கும் எமது வாழ்த்தையும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து அமைகின்றேன்.

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.
தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

உ

வழிபாட்டுப் பெருமைமிக்க துர்க்காதேவி தேவஸ்தானத்தின்

# பூர்வீகச் சிறப்பும் இன்றைய எழுச்சிப் பெருநிலையும்

அருள்மிகு துர்க்கை அம்பாளின் எழில்மிகு தோற்றத்தை இன்று தெல்லிப்பழை துர்க்காபுரப் பகுதியிலே ஆயிரமாயிரம் உள்ளங்கள் ஒன்றுபட்டுத் தரிசிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் வடபால் காங்கேசன் துறைப் பெருந்தெரு வழியே எட்டாவதுமைல் கல் தொலைவில் அமைந்திருக்கும் இவ்வாலயம் துர்க்கை அம்பாளின் பரிபூரண சக்தியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த இவ் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றை முதலில் அறிந்து கொள்வது பயன் தருவதாகும்.

## பூர்வீகச் சிறப்பு :

தொன்று தொட்டு வளமும், பண்பாடு சார்ந்த மக்கள் இலங்கும் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை கொண்டுள்ள பிரிவுகளிலே உழவுத் தொழிலைக் கைக்கொண்டு வரும், உயர் புகழுக்கு வித்துமாய கொடைப் பண்புடையவரும் செறிந்திலங்கும் உழுகுடைப்பதி வவுணாவத்தையிலே சைவ மரபிலே வந்த சைவப்பெரியார் கதிர்காமர். இவர் இருபாலும் சிறந்த சைவக்குடியில் தோன்றியவர். இளமையிற் கற்பன கற்றும், கேட்பன கேட்டும் உடம்பினாற் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்டல் என்னும் சைவநெறி பற்றியே ஒழுகினார்.

ஏறக்குறைய 1750ஆம் ஆண்டளவில் கதிர்காமர் இந்தியாவுக்குத் தலயாத்திரைக்காகப் புறப்பட்டு காங்கேசன்துறையில் தோணியேறித் தென்னிந்தியாவின் கீழைக்கரையில் உள்ள வேதாரணியத்திலே கரையேறினார். அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகத் தல வழிபாடு செய்து கொண்டு காசித்திருத்தலம் வரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறைய பத்து வருடங்கள் கடந்தன. இக்காலவெல்லைக்குள் அவர் தமிழையும் சமஸ்கிருதத்தையும் நன்கு கற்றுத்தேறி ஒரு துர்க்கை உபாசகராகவும் மாறிவிட்டார். அதனால் ஏறக்குறைய 1760ஆம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திரும்பும்போது துர்க்கா தேவி இயந்திரமொன்றையும் வெண்கலத்தினாலமைந்த 'திருமுகக் கெண்டி' உருவமொன்றையும் கையோடு கொண்டு வந்தார். குறித்த அன்பர் கதிர்காமர் அவர்கள் காசியிற் பலநாள் தங்கியிருந்தார். இந்தியா முழுவதிலுமுள்ள சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள்ளும் காசியினுள்ள சொப்பனேஸ்வரி பீடம் முக்கியமானது. துர்க்காதேவி

சகல கலைகளுடனும் பொலிந்திருக்கும் பீடம் அது. அன்பர் கதிர்காமர் குறித்த இயந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருந்தார் என எண்ணுதற்கு இடமுண்டு.

காசியாத்திரையை முடித்துக்கொண்டு காங்கேசன்துறையை வந்தடைந்த இப்பெரியார் கீரிமலையில் புண்ணிய தீர்த்தமாடி அங்கிருந்து நடந்து மூன்றுமைல் தூரம் இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருந்தார். திருவருள் அவரது நடையிலே தளர்வைத் தோற்றுவித்தது. ஆயிரக்கணக்கான மைல் தொலைவெல்லாம் நடைகொண்ட நம் பெருந்தகையின் ஆற்றலிலே அடங்கிக்கிடக்கும் துர்க்கை அங்கிருந்து கொண்டு அனைவருக்கும் திருவருள் பாலிக்கும் திருக்கருணை கொண்டாள். நடை தளர, உடல் தளர, அண்டியிருந்த இலுப்பைத் தோப்பிலே இளைப்பாறினார். திருவருட் கருணையால் அவர் முன் தோன்றி அவர் கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை அங்கே தாபிக்குமாறு ஆணை பிறந்தது. அவ்வாணையைச் சிரமேல் தாங்கி மரத்தடியிலே சக்கரத்தை அமைத்து வழிபடத் தொடங்கினார். தெல்லிப்பழை உழுகுடைப்பதி இலுப்பைத் தோப்பிலே நாகசர்ப்பங்கள் வருவதுண்டு. அவை அங்கு பூசை முடிந்தவுடன் மறைந்துவிடும். வெளிப்படத் தோன்றும் காலங்களிலும் பிற காலங்களிலும் யாரையும் அச்சமுறும் அளவிற்குக்கூட நாகங்கள் நடந்து கொண்டதில்லை. பூசைக் காலத்திலே குருக்கள் பாம்புகளுக்குப் பாலும் பழமும் வைத்து வழிபடலும் அவை அவற்றை உட்கொள்ளலும் உண்டு. கதிர்காமர் தாம் கொண்டு வந்த இயந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் ஸ்தாபனம் செய்து வழிபட்ட இடமே இன்று துர்க்காதேவி தேவஸ்தானமாக வானளாவும் கோபுரமும் அலங்கார வளைவு கொண்ட நுழைவாயிலும் அழகிய தெப்பக்குளமும் எழிலூட்டி நிற்கக் காட்சி தருகின்றது. கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலையமாயிருந்த இந்த ஆலயம் பரார்த்த பூசைக்குரிய நிலையமாய் இன்று விருத்தி அடைந்தவற்றை மேற் கூறிய செய்தி உணர்த்துகிறது.

**மாவிட்டபுரத் திருத்தல தொடர்பு:**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலோடு இவ்வாலயத்திற்கு ஆரம்ப காலம் முதலே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளதை பழைய ஏட்டுப் பிரதிகள் குறிப்பிடுகின்றன. மாவை முருகன் ஆலயத்தில் கருங்கற் திருப்பணி நிறைவேற்றப்பட்டு 1815இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதெனவும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின் (கி. பி. 1820) தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதெனவும் அறிகிறோம். மேலும் அரசாங்கக் கச்சேரிப் பதிவுகளில் ''துர்க்காதேவி ஆலயம்'' கற்கோவிலென்று 1820இல் பதியப்பட்ட செய்தியும் மேற் கூறியதற்கு சான்றாக உள்ளது. 1829ஆம்

ஆண்டு புரட்டாதி விஜயதசமி தினத் அன்று மாவை முருகன் இவ்வால யத்திற்கு எழுந்தருளி வந்து வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சி ஆரம்ப மாகியது. இந்த விழா வசிட்ட இலிங்க புராண சுப்பிரமணிய பராக் கிரமத்தை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது.

**புராண படனச் சிறப்பு :**

இவ்வாலயத்திற் தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் மற்றொரு சிறப்பம்சம் புராணபடனமாகும். வருடம் தோறும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியன கிரமமாகப் படிக் கப் பெற்று வந்துள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல அறிஞர்கள் பலர் இப்படிப்புக்களில் பங்குபற்றியுள்ளனர். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் அவர்கள் இவர்களில் ஒருவர். 1958ஆம் ஆண்டு தொடக்கம் மூன்று பெரும் புராணங்களும் படிக்கப்பெற்று உரைகூறிப் பயன்கூறி வந்தமையும் சிறப்பம்சமாகும். பௌராணிகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா பண்டிதர் கா. நமசிவாயம், பண்டிதர் சிவசண்முக வடிவேல், சிவத்திரு சி. ஈஸ்வரதாஸ் ஐயா போன்றோர் புராணம் படித்து உரை விரித்து வருவதில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**தர்மகர்த்தா சபையும் நிர்வாக சபையும் :**

1948இல் தனி முகாமையாளர் திரு. க. நாகநாதர் அவர்களினால் பதினொரு பேரைக் கொண்ட தர்மகர்த்தா சபையினரிடம் கோயிற் பரிபாலனம் ஒப்புவிக்கப்பட்டது. மேலும் 1965இல் உபசபையாக பதி னெட்டுப் பேர் கொண்ட நிர்வாக சபையைத் தெரிவு செய்து அவர் களிடம் பரிபாலனப் பொறுப்பை ஒப்படைத்தனர். இதன் பிரகாரம் கடந்த நாற்பது வருடங்களாக ஒரே நிர்வாகசபை எதுவித குறுக்கீடு மின்றி இவ் ஆலயத்தை நல்லமுறையில் பரிபாலித்து வருவது அம்பா ளின் அற்புதத்தை எடுத்துக்காட்டுவதாகும். இதனை முன்னிட்டு முதல் கும்பாபிஷேகம் 1965ஆம் ஆண்டு ஆவணி ஓணத்திலும் இரண்டாவது கும்பாபிஷேகம் 1981 சித்திரை உத்தரத்திலும் மூன்றாவது கும்பாபிஷே கம் 1997 ஆவணிச்சோதியிலும் சிறப்பாக நடைபெற்றது. 1977 முதல் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள் தலைவராய் பணிபுரிந்து பன்முகப்பட்ட சமுதாய சமூகப்பணிகளை ஆற்றிவருவது யாவரும் அறிந்ததே. மாதந்தோறும் நிர்வாகசபைக் கூட்டம் நடைபெற்று வரவு செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வரு கிறது.

**மகோற்சவ பெருவிழா :**

துர்க்காதேவி ஆலய வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது 1968ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகோற்சவமாகும். ஆவணி மாத பூர்வபட்சத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் ஆரம்பமாகி திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த விழாவோடு நிறைவு பெறுவது எம் மகோற்சவ ஒழுங்காகும். பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் இம் மகோற்சவத்தில் கொடியேற்றம் கொடியிறக்கம் ஆகியன பொது மக்களின் பொது உபய

மாக இடம் பெறுகிறது. மகோற்சவ உபயங்கள் தனி உபயங்களாக நடைபெற்று வருகின்றது. மகோற்சவ காலங்களில் அடியார்களுக்கு அன்னசத்திரத்தில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. கொடியேற்றம், தேர் உற்சவம், தீர்த்த உற்சவம் என்பவற்றை இலங்கை வானொலியினர் ஒலிபரப்புச்செய்து வருகின்றனர். தினகரன், தினக்குரல், வீரகேசரி, உதயன், வலம்புரி, ஈழநாடு, யாழ் தினக்குரல் என்னும் பத்திரிகைகள் மகோற்சவம் பற்றிய செய்திகளையும், கட்டுரைகளையும் பிரசுரித்து வருகின்றன.

## மகா கும்பாபிஷேகமும் சைவசித்தாந்த மகாநாடும் :

1981ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் (17-4-1981) ஆலயத்திற்கும் இராசகோபுரத்திற்கும் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. தமிழகத்திலிருந்து வருகைதந்தவேத விற்பன்னர்களும் ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகளும் ஈழத்து நாலா புறத்திலிருந்து வருகை தந்த சிவாசாரியார்களும் பக்த கோடிகளும் குழுமி நின்று நடாத்திய இக் கும்பாபிஷேக விழாவை தரிசிக்க ஆயிரங் கண்கள் போதாதென்ற அங்கலாய்ப்பு அன்று அன்பர்களிடையே இருந்தது.

இதனையடுத்து மே மாதம் 8ஆம் 9ஆம் 10ஆம் திகதிகளில் இவ்வாலய முன்றிலில் சென்னை சைவ சித்தாந்த சமாச மகாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தமிழகத்திலிருந்து முந்நூறுக்கு மேற்பட்ட அறிஞர்கள் இங்கு வருகை தந்தனர். கலாநிதிகள், சைவசித்தாந்தப் பேரறிஞர்கள், புலவர்கள், பேராசிரியர்கள், இசை மேதைகள், ஓதுவார்கள், கல்லூரி அதிபர்கள், பல்கலைக் கழக பேராசிரியர்கள் பலர் தமிழகத்திலிருந்து வருகை தந்த பெருவிழா அதுவாகும். இவ் வைபவத்தோடு தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சைவ சித்தாந்த பீடத்துக்கும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஐம்பதுனாயிரம் ரூபாவை வைப்பு நிதியாக வழங்கியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## துர்க்காபுரம் மகளிர் இல்லம் :

தேவஸ்தானம் ஆற்றும் பன்முகப் பணிகளில் தலையாய ஒரு அறப் பணியாகக் கருதப்படுவது துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணியாகும். ஆதரவற்ற ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுமிகளை ஆதரித்துக் கல்வியூட்டி, உணவூட்டி சகல பராமரிப்பையும் மேற்கொண்டு பணி புரிவதற்கு ஆரம்பத்தில் சிறிய கட்டடத்தில் இடம் பெற்றது. இவ் இல்லம் – 1982ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு சகல வசதிகளுடன் கூடிய மாடிக் கட்டடம் கட்டப்பட்டது. அவர்கள் தமது கல்வியை யாழ். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும் கற்கிறார்கள். மூன்று பேர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். மூன்று பேர் யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று பட்டதாரிகளாக வெளிவந்துள்ளனர். ஒருவர் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

இன்றும் மூவர் நுண் கலைப் பீடத்தில் கல்வி பயில்கின்றனர். அகில இலங்கை ரீதியான பாவோதல் போட்டியிலும் எமது இல்ல மாணவி வடக்குக் கிழக்கில் முதலாமிடத்தையும் அகில இலங்கையில் மூன்றாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றை விட பூமாலை கட்டல், கோலம் போடுதல் ஏனைய கலைகள் யாவற்றிலும் சிறந்து விளங்குவதோடு பாடசாலைக்கும் புகழ் தேடிக் கொடுத்து வருகிறார்கள் இவ்வில்ல மாணவிகள். பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி ஆகியவற்றிற்கு வெளிநாட்டு உள்நாட்டு அன்பர்களின் உதவியும், வைப்பு நிதிகளும் அறக் கொடைகளும் பேருதவியாக அமைகின்றன. இத்தகைய ஒரு அறப்பணிக்கு எம்மை ஆளாக்கிய துர்க்கை அம்பாள் அடியார்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம். இவர்கள் கல்வி கற்க பாடசாலை செல்ல வாகனம் ஒன்று கொள்வனவு செய்துள்ளோம். இன்று இல்லத்தில் 65 பிள்ளைகள் உள்ளனர்.

**பல்துறைப்பட்ட சமூகப்பணிகள் :**

ஆலயங்களெல்லாம் அறச்சாலைகளாக அமையவேண்டும் என்ற புனித நோக்கத்திற்கமைய கடந்த நாற்பது ஆண்டுகளாக இவ்வாலயம் ஆற்றிவரும் பணிகள் குறிப்பிடத்தக்கதாகும். கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களின் பிறந்தநாள் அறநிதியம் 1989ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை சிறப்பாக இயங்கி வருகின்றது. ஆண்டு தோறும் ஜனவரி மாதம் 7ஆம் திகதியில் இதன் பயன்பாடு நிகழ்கிறது. நூல் வெளியீடு, அறிஞர்களை கௌரவித்தல், வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்குதவுதல், கைதடி வயோதிபர் இல்லத்திற்கு அன்பளிப்பு, யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு உதவியமை, யாழ் போதனா வைத்தியசாலைக்கு சளி இழுக்கும் இயந்திரம் வாங்க உதவியமை குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். அடுத்த வருடம் இந்நிதியத்தின் சார்பிலே சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு அனாதைகளாக விளங்குகின்ற அன்னையர்கள் இதில் இடம் பெற்றுள்ளனர். பிறந்தநாள் அறநிதியத்தின் சார்பில் தற்போது பத்து இலட்சம் ரூபா வரையில் நிரந்தர வைப்பிலிட்டு இதன் வட்டி ஆண்டு தோறும் சமூகப்பணிக்கு ஒதுக்கப்படுகின்றது.

மற்றும் இவ்வாலயத்தின் நிதியிலிருந்து இந்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களும், வைத்தியசாலைகளும், பாடசாலைகளும் பயன் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயப் பணிகளோடு மக்கள் பணியும் இடம் பெறுகின்றது. இதைவிட காலந்தோறும் எம்மண்ணில் அகதிகளாக்கப்பட்டு தவித்து நிற்கும் மக்களுக்கு அவ்வப்போது உணவு, உடை, உறையுள், பண உதவி புரிந்து வருவதை இந்த நாடு நன்கு அறியும். மேலும் விழிப்புலனற்றோர் புற்றுநோயாளர் ஆகியோருக்

கும் உதவி செய்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆலயப் பணிகளோடு மகளிர் இல்லப்பணி, ஆதரவற்ற அன்னையர் இல்லப்பணி மற்றும் சமூகப்பணிகள் அனைத்தும் சகலரும் வியக்கும்படி நடைபெறுகிறது என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம்.

தேவஸ்தான நிர்வாக சபையில் பதினெட்டு உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாகத் தலைவராக இருந்து அரும்பணியாற்றுகிறார். இவருடைய தலைமையில் இச்சபை கண்ணிய மான பணி புரிந்து வருகிறது. ஆலயத்தில் நிரந்தரமாக ஒன்பது அந்த ணப் பெருமக்களும் பன்னிரண்டு உத்தியோகத்தர்களும் பத்துக்கு மேற் பட்ட சிற்றூழியர்களும் பணி புரிந்து சிறப்பிக்கின்றனர்.

**நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் :**

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம் நல்லூர் கந்தன் மேற்கு வீதி யில் அமைந்துள்ளது. இந்த மண்டபத்திற்கான காணி நிலத்தை பெரு மாட்டி திருமதி விசாலாட்சி அரியகுட்டி அம்மையார் அவர்கள் தர்ம சாதனம் செய்துள்ளார். அவருடைய தர்மத்தை இன்றும் உலகம் பாராட் டிக் கொண்டு இருக்கின்றது. நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம் நல்லைக்கந்தன் மகோற்சவ காலம் இருபத்தைந்து நாளும் அடியார் களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. தவப்பெருந்திரு நாவலர் பெருமான் குருபூசை, தவமுனிவர் யோகசுவாமிகளின் குருபூசை, சமய குரவர்கள் குருபூசை என்பன சிறப்பாக இங்கு நடைபெறுகின்றது. மகோற்சவகால கார்த்திகைத் திருவிழா, தேர்த்திருவிழா ஆகிய நாட் களில் தண்ணீர்ப் பந்தல் நடாத்தப்பட்டு வருகின்றது. இங்கு இசை நிகழ்ச்சிகள் மற்றும் சமய நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள், அரங் கேற்ற நிகழ்ச்சிகள், திருமண வைபவங்கள் நடைபெற்று வருகின்றன.

**சுன்னாகம் திருமகள் அழுத்தகம் :**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் பதிப்புப் பணிக்கு முன்னுரிமை வழங்கி திருமகள் அச்சியந்திரத்தை 1989 ஜனவரி மாதம் கொள் வனவு செய்தது. சுன்னாகம் திருமகள் அழுத்தகம், பத்திரிகை உலகில் தடம்பதித்த '' ஈழகேசரி '' பத்திரிகையை அச்சிற் பதித்த பெருமை பெற்றது. அச்சுத்துறையில் பல நூல்களை வெளியிட்ட வரலாறு இதற்கு உண்டு. தேவஸ்தான, மகளிர் இல்ல, நல்லூர் மணிமண்டபம் சார்பான அச்சுப்பணிகளை நல்ல முறையில் செம்மையாக நிறைவேற்றித் தரு கின்றது. தமிழ், சமயம், இலக்கியம், வரலாறு போன்ற பல்வேறு நூல்களை சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்டு வருகின்றது. தேவஸ்தானத்துக்கு சொந்தமான திருமகள் அழுத்தகம் தற்பொழுது மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு அருகே பிரதான வீதியில் உள்ள வீடு ஒன்றில் இயங்கி வருகின்றது.

**சிவத்தமிழ்ச்செல்வி அம்மா சைவத்தமிழ் ஆய்வு நூலகம்:**

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றி வருகின்ற அறப்பணிகளின் தொடரில் 07-01-2002இல் சிவத்தமிழ்ச்செல்வி அம்மா சைவத்தமிழ் ஆய்வு நூலகம் திறந்து வைக்கப்பட்டது. கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு திரு. சி. வி. விக்கினேஸ்வரன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. 'வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்' கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்கின்ற முதுமொழிகள் நோக்கத்தக்கது. இவ்வாய்வு நூலகத்தில் பண்டைய இலக்கண இலக்கிய நூல்கள், பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், பதினெண் புராணங்கள், வரலாற்று நூல்கள், எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் பிரபந்தங்கள், மூவர் தேவாரம், பெரியபுராண சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் உரைவிளக்க நூல்கள், சித்தாந்தம், ஞானசம்பந்தம், ஆண்டு மலர்கள், சென்னை தமிழ் வளர்ச்சிக்கழக கலைக்களஞ்சியம், கும்பாபிஷேக மலர்கள், கோவில் வரலாற்று நூல்கள், ஆய்வுக்கட்டுரைகளின் நூல்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. நூலக முன்புறம் பல்வேறு சிற்ப அமைப்புக்களையும், முன்றிலில் கல்விக்கதிபதியான ''சரஸ்வதி'' யின் வெண்கலச்சிலையும் வெண்தாமரைப் பூவில் அமைக்கப்பெற்று காட்சி கொடுக்கின்றது.

**''அருள் ஒளி'' மாதாந்த சஞ்சிகை:**

எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றி வருகின்ற பன்முகப்பட்ட சமுகப்பணிகளில் ஒன்றாக ''அருள் ஒளி'' என்னும் பெயரில் சமய சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றோம். கடந்த ஆண்டு மகோற்சவத்தின் ஆவணி ஓணத் தீர்த்த உற்சவ நாளன்று முதலாவது சஞ்சிகை வெளிவந்தது. சமயப்பிரசாரப் பணியாக மாதந்தோறும் பூரணையை முன்னிட்ட செவ்வாய்க்கிழமைகளில் வெளிவருகின்றது. ஒவ்வொரு மாதத்தில் வருகின்ற சிறப்புமிகு விழாக்கள் விரத அனுட்டான மகிமைகள் சமயக் கட்டுரைகள் போன்ற பல்வேறு அம்சங்களைத் தாங்கி வெளிவருகின்றது. சமய முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு அச்சுக் கூலிச் செலவைப் பொருள் செய்யாது குறைந்த பெறுமதிக்கு சஞ்சிகையை அடியார்களுக்கு வழங்கி வருகின்றது.

**சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்:**

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் அருகே ஒரு சிறப்பு அம்சமாக சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம் அமைக்கப்பெற்றது. இந்த அமைப்பு ஒரு சில குறிக்கோளுடன் அமையப்பெற்றது. 55 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இவ்வில்லத்தில் இடம்பெறுகின்றனர். அவர்களுடைய ஊதியம் எதுவும் பெறாது மகளிர் இல்ல நிதியில் இருந்து பராமரிக்கப்படுகிறார்கள். இவர்கள் வேறு எவருடைய உதவிகளையும் நாடாது இல்லத்தையே நம்பி வாழ்கிறார்கள். இவர்கள் ஆலய சரியைப் பணிகளையும், மகளிர் இல்லப் பணிகளையும் நல்லபடி ஆற்றி வருவது கண்கூடு. இவர்களுடைய உணவு, உடை, வைத்தியம் மற்றும் நானாவித செலவுகளுக்கு மகளிர் இல்ல நிதியிலிருந்து கைச்செலவுப்

பணம் வழங்கப்பட்டு வருகின்றது. இவர்கள் அனைவரும் அம்பாள் வழிபாட்டில் திளைத்து பூரண அமைதியும், மன நிறைவும் பெற்று வாழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். இவர்களில் இன்று பதினைந்து பேர் வரையில் இடம் பெற்றுள்ளனர்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் இவ்வாலயத்தோடு கடந்த முப்பத்தைந்து வருடங்களாக இணைந்து சரியைத் தொண்டாற்றி வருவது ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கை அளிக்கிறது. துர்க்கா தேவி பெண்கள் தொண்டர் சபையினரும் பலவேறுபட்ட சரியைப் பணிகளைச் செய்து வருகிறார்கள். இச்சபை 1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பெற்றது.

இன்று உலகமெங்கணும் வாழும் சைவத்தமிழ் மக்களில் பெரும்பாலோர் துர்க்காதேவியின் அடியார்களாக விளங்குவதால் அவர்கள் பெறும் இன்ப அனுபவங்கள் நாள் தோறும் கடிதமூலமும் நேர்முகமாகவும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. கருணைத் தாயாக இங்கு எழுந்தருளி உலகமெங்கும் தனது கருணைப் பிரவாகத்தை வீசி ஒளி கொடுத்து வருவது பற்றியும் அன்னை ஆற்றிவைக்கும் அற்புதங்கள் பற்றியும் எழுதுவதென்றால் இன்னொரு நூலாகவே அமையும். ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இத்தாலி, இலண்டன், நோர்வே, அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, மலேசியா, சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகள் எங்கும் தேவியின் பிரதிமைப்படம் வைத்து பூசிப்பவர் பலர். இங்கே மகோற்சவம் நடைபெறும் காலங்களில் அங்கு விரதமிருந்து அனுட்டிப்போர் பலர். எனவே மெய்யடியார்கள் பலரதும் அன்பும் பக்தியும் ஆதரவும் பொங்கி வந்து கொண்டிருப்பதால் எல்லா வகையான சிறப்பையும் இவ்வாலயம் பெற்று மிளிர்கிறது என்பது வெள்ளிடைமலை

★ ★ ★

## தேர்வடம் பிடித்திடுவோம் வாரீர்

அசைந்தாடும் தேரில் பவனி வந்தாள்
தேவி மனோன்மணி அன்னை துர்க்காதேவி
வீதி எங்கும் அலைகடல் போல்
பக்தர் கூட்டத்தில் தேரில் வந்தாள்.

அரோகரா என்று நாம் கூறிடுவோமே
அன்னை அவளும் ஆனந்தமாய் வந்திடுவாளே
சக்தித் தாயை அன்புடனே வணங்கிடுவோமே
அவளருளை பெற்றிடவே தேர்வடம் பிடித்திடுவோம் வாரீர்.

ஆக்கம் : செல்வி கிருஸ்ணசாமி ஜமுனாதேவி
யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி

உ

# எழில்மிகு துர்க்கையின் அருள்மிகு திருக்கோலம்

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்

ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத் தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. இவளே சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமாயவள். அமைதியான வாழ்வையும் அளவில்லாத ஆனந்தத்தையும் அருளும் அன்னையாக மிளிர்கிறாள். இவளை உபாசித்துப் பெரும் புண்ணியம் பெற்றோர் பலர். எவனுக்கும் மறுபிறவி என்பது ஒன்று இல்லையோ அவனே அம்பிகையை உபாசிக்கும் பாக்கியம் பெற்றவனாவான்.

நம் நாட்டில் தேவிவழிபாடு மிகச் சிறந்து காணப்படுகிறது. அம்பிகையின் உருவபேதங்கள் பல. அவற்றை அமைத்துக்கொண்டு வேறு வேறு நிலையில் வைத்து வழிபடுவோர் பலர்.

எக்காலத்தில் தர்மத்துக்குக் குறைவு உண்டாகி அதர்மம் மிகுதியாகின்றதோ அப்பொழுது நான் அவதரிப்பேன் என்று பார்த்தசாரதியான கண்ணன் கீதையில் அருளினான். அதேபோல் எப்பொழுது அரக்கர்களால் துன்பமுண்டாகிறதோ அப்பொழுது நான் அவதரித்துப்பகைவர்களை நாசம் செய்வேன் என்பது தேவியின் அருள்வாக்கு. இவ்விதம் தேவியும் கண்ணனும் ஒரே கருத்துள்ள வாசகங்களை வெளிப்படுத்துவதனால் இருவரும் ஒரே தத்துவமாக இருக்கவேண்டுமென்பது புலனாகிறது. ''அரியலால் தேவியில்லை'' என்பது தேவாரம். பரமேஸ்வரனுடைய சக்தி போக காலத்தில் பவானியாகவும், போரிலே துர்க்கையாகவும், கோப காலத்தில் காளியாகவும், இரட்சிக்கும் காலத்தில் விஷ்ணுவாகவும் பிரிந்து காட்சி தருகிறது. இதனால் சக்தி தத்துவமும் விஷ்ணு தத்துவமும் ஒன்றென்பதை அறியலாம். சக்திகளின் பெருமையை விளக்குவது சப்தசதி மந்திரமாகும். இதில் எழுநூறு மந்திரங்கள் இருப்பதாலும், எழுநூறு வகையான பிரயோகங்கள் அமைவதாலும் சப்தசதி என்று பெயர் கூறுவர், சப்த என்பது ஏழு; சதி என்பது நூறு.

சிறப்பாகச் சப்தசதி மந்திரத்தினால் உணர்த்தப்படும் தேவதை துர்க்கை, துர்க்காதேவி ஒன்பது பேதமுடையவளாகச் சொல்லப்பட்டிருக்கிறாள். ஜெயா, விஜயா, பத்ரா, பத்ரகாளி, ஸுமுகி, துர்முகி, ப்ரக்ஞா, வ்யாக்ரமுகி சிங்கமுகி என்று ஒன்பது வகையாகத் துர்க்காதேவி சொல்லப்பட்டிருக்கிறாள். மேலும் ஆகமங்களில் வனதுர்க்கை, ஜலதுர்க்கை, வன்னி துர்க்கை, ஸ்தூல துர்க்கை, விஷ்ணு துர்க்கை, பிரமா துர்க்கை, ருத்ர துர்க்கை, மஹா துர்க்கை, சூலினி துர்க்கை என்று ஒன்பது வகையான திருக்கோலங்களும் கூறப்பட்டிருக்கின்றன. துர்க்கையை எல்லா நலம் குறித்தும் பிரார்த்திக்கலாம். பிராமண குமாரியாக நின்று உயர் நலம் அளிக்கின்றாள். சத்திரிய குமாரியாக நின்று வெற்றி தருகின்றாள். வைசியகுமாரியாக நின்று லாபம் அளிக்கின்றாள், சூத்திர குமாரியாக நின்று திருமணம், பிள்ளைப் பேறு ஆகிய வரங்களைத் தருகின்றாள். நாட்டிலே மழையில்லாது வரட்சியுற்ற நேரத்தில் மழையைப் பொழிவித்துப் பசிப்பிணியைத் தீர்த்து இரட்சிப்பதால் சாகம்பரி, சதாட்சி என்ற நாமங்கள் ஏற்பட்டன. துர்க்கன் என்ற அசுரனைக் கொன்றமையால் துர்க்கா என்னும் சிறப்பு நாமம் கொண்டு வழிபடப்படுகிறது.

மகிடாசுரனால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் பிரமாவிடமும், விஷ்ணுவிடமும் தங்கள் குறைகளைச் சொல்லி முறை

யிட்டனர். ஆங்கு வெளிப்பட்ட சினம் என்னும் சக்தி ஒன்று சேர்ந்து உரு வெடுத்த வடிவமே துர்க்கை வடிவம் என்று பேசப்படுகின்றது. துர்க்காதேவி சிங்க வாகனத்தில் ஆரோகணித்து, மகி டாசுரனை எதிர்த்துப்போருக்கெழுந்தாள். அவ்வசுரனும் படைகளுடன் போருக்கு வந்தான். அம்பிகையின் வாகனமாகிய சிங்கமே அசுரசைனியங்கள் அனைத்தையும் அழித்துவிட்டது. அசுர மகுட உருவில் வந்தபோது அவன் செருக்கை அடக்கி, அம்பிகை தனது திருவடியால் அமுக்தி ஆட்கொண்டாள். தேவி சதுர்ப்புஜங்களில் சங்கு, சக்கரம், தாமரை, ஜெபமாலை என்பவற்றைத் தாங்கிநிற்கும் திருக் கோலம் தியானத்திற்கு விருந்தளிப்ப தாகும். துர்க்காதேவிக்கு ஈழவளநாட்டில் மிகப் பழமையான தனிப்பெருங் கோயில் அமைந்திருப்பது என்றால் அது யாழ்ப் பாணத்தின் வடபாகத்திலுள்ள தெல்லிப் பழையிலேதான் இருக்கிறது. கிழக்குப் பார்த்த சந்நிதியாகப் பிரதான வீதியை நோக்கியவண்ணம் காட்சிதருவதும், தல விருட்சங்களாக இலுப்பையும், மாவும், மகிழும், அரசும் அமைந்து விளங்குவதும், ஆகம விதிகளுக்கமைய மூல மூர்த்தியும், பிரகார மூர்த்திகளும் அமைந்து காட்சி தருவதும், பாகசாலை, யாகசாலை, வாகன சாலை, அந்தணர்சாலை, அலுவலகம், திரு முறை மண்டபம், பக்தர்கள் விடுதி, திரு நந்தவனம், அன்னதான மண்டபம் என்ப வற்றோடு இவ்வாலயம் தோற்றமளிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஏராள மான பக்தர்கள் இப்பொழுது இங்குவந்து அவரவர் இஷ்ட பூர்த்திக்கு வேண்டுதல் செலுத்தி, அதனால் நிவர்த்தியும் பெறு கிறார்கள் என்பதும் கண்கூடு. கடந்த பத்து ஆண்டுகளுக்குள் துர்க்காதேவியின் அருட் பிரகாசம் பிரவாகித்து, ஈழவள நாடெங்கணும் செறிந்து பாய்கிறது அன் னையின் அருள்மிகு திருக்கோலத்தினைப் பல்லாயிரம் மக்கள் எழில்மிகு சித்திரத் தேரில் வைத்துத் தரிசிப்பதற்கு இவ்வாண்டு எதிர்நோக்கிய வண்ணம் இருக்கிறார்கள்.

நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி அன்னை பவனிவரும் காட்சி அடியார்களை அத்திருவருள் ஒளிக்குள் நிறுத்திவிடும் என் பதில் சந்தேகமில்லை. இவ்வாண்டு ஆவணி உத்தராட நாளை ஆவலுடன் எதிர்நோக் கும் எம் அனைவருக்கும் அன்னையின் கருணை முற்றாகக் கிடைக்கட்டும்.

நன்றி - சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர்

---

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல் பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப் பெம்மான் முக்கட் சுடர்க்கிடுதல்
விருந்தே வருக மும்முதற்கும் வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின் விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம் குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே.

— மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

# கருங்கல்லில் கடவுள் ஏன் இருக்க முடியாது?

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

---

*சைவ சிந்தாந்தத்தில் உருவ வழிபாடு மிக முக்கியமானதாகும். ஆனால் உருவம் இல்லாத ஒன்றையும் நம்மால் நினைக்க முடியாது. நாம் ஒன்றை நினைக்க வேண்டும் என்றால் அதற்கு உருவம் வேண்டும். உருவம் இல்லாத ஒன்றை நினைப்பது மிகக்கடினம். எனவே நமது மக்கள் வாழ்க்கையில் ஆண்டவனை வழிபட உருவம் தேவைப்பட்டது. அதன்படி உருவங்களுடன் ஆலயங்களும் எழுப்பப்பட்டன. உலகம் முழுவதும் நிறைந்துள்ள ஆண்டவனை வணங்குவதற்கு நமக்கு ஏன் ஆலயங்கள் அவசியமானவை என்று நாம் அறிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். ஆண்டவனை நாம் எந்த இடத்தில் இருந்து கொண்டும் வழிபாடு செய்ய முடியும் என்றாலும் அதற்கும் இயல்பாகச் சில தடைகள் இருக்கின்றன. வியாபார ஸ்தலம் ஒன்று இருக்கிறது. எந்த நேரமும் அங்கு பொய்யும் புரட்டும் நிறைந்தபடியே இருக்கும். இலாப நட்டக் கணக்குப் பார்க்கும் இடந்தான் அது. எவருக்கும் பணத்தைப் பற்றிய சிந்தனையே ஓடிக்கொண்டிருக்கும். அங்கு கடவுள் பற்றிய சிந்தனைக்கு இடமில்லை.*

**பக்தியைத் தேடும் இடம் கோவில்களே:**

*இன்னும் சற்று விரிவாக ஆராயப்போவோமானால் காற்று எங்கும் இருக்கிறது. காற்று இல்லாமல் நாம் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது. காற்றைப் போலவே கடவுளும் எங்கும் நிறைந்துள்ளான் என்பது உண்மையாகும். நாம் சில சமயங்களில் காற்றில்லை காற்றில்லை என்று அவதிப்படுகிறோம். உண்மையில் காற்றில்லை என்று அர்த்தமா? காற்றில்லாவிட்டால் தான் நாம் ஒரு நிமிடம் கூடச்சீவிக்க முடியாதே. இதன் அர்த்தம் என்ன? காற்று இருக்கவே இருக்கத்தான் செய்கிறது நமது உடம்பால் அதைச் செவ்வனே அனுபவிக்க முடிவதில்லை. உடனே காற்றை நாம் அனுபவிப்பதற்கு விசிறியின் உதவியை நாடுகிறோம். விசிறியினது உதவிகொண்டு காற்றினது தன்மையை நாம் அனுபவிக்க முடிகிறது. ஆண்டவனும் காற்றைப்போல நிறைந்து தான் இருக்கிறான் என்றாலும் நாம் அவனை உணர்ந்து கொள்வதற்கு அந்த விசிறியைப் போல ஆலயங்கள் உதவிபுரிகின்றன. உலக வாழ்வு பொன்னால், பொருளால், போகத்தால், போட்டி பொறாமைகளினால் வெப்பமாக இருக்கிறது. இந்த வெப்ப நிலையில் நம்மால் ஆண்டவனைக் காண முடிவதில்லை. இதனால் கடவுள் இல்லை என்று அர்த்தமில்லை. இந்த வெப்பநிலையைத்தான் ஆலயங்கள் விசிறியைப் போல நமக்குத் தீர்த்து வைக்கின்றன.*

பக்தி நிலையை எழுப்புகின்ற தன்மை திருக்கோவில்களுக்குண்டு. கடை வீதிக்கு எப்படிச் சாமான்களைத் தேடிப்போகிறோமோ அப்படிக் கோவில்களுக்குப் பக்தியைத் தேடிப்போக வேண்டும். அது அதற்குரிய நிலையை உடையது. இந்த நிலைமாறி ஈழத்துத் திருக்கோவில்கள் போட்டி பொறாமை பூசல்களுக்கிடையே சிக்கின நிலையில் காணப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் யாருக்குக் காளாஞ்சி யாருக்கு அது இது என்ற சண்டைகளைத்தான் பார்க்க முடிகிறது. இது வருத்தப்பட வேண்டிய விடயமாகும்.

**கருங்கல்லில் காணலாம்:**

ஆலயங்களில் நாம் கடவுளைக் காணும் மார்க்கம் என்ன? கருங்கல்லில் நாம் கடவுளைக் காணலாமா? என்று இன்றைய இளைஞர்களிற் பலர் கேட்கிறார்கள். சடபொருள்களையெல்லாம் மனிதன் தனது சக்தியைக் கொண்டு பாட ஆட ஓட வைக்கிறானே. சடப்பொருள்களில் இந்த நிலை சாத்தியமாக இருக்கும்போது ஏன் மனிதன் சடப்பொருளாகிய கருங்கல்லில மட்டும் ஒரு சக்தியைக் காண முடியாதென்று கேட்க விரும்புகிறேன். (பலத்த கரகோஷம்) கோவில் வழிபாட்டில் நமக்கு நம்பிக்கை வேண்டும். அது மிக முக்கியமாகும். பண்பட்ட சைவ நெறியை அனைவரும் போற்றிக் காப்பாற்ற வேண்டும். இது எனது வேண்டுகோளாகும். இன்றைய விஞ்ஞானம் இருக்கிறதே அது கடவுட் தன்மைக்கும் சைவ சித்தாந்தத்திற்கும் மாறுபட்டதல்ல. ஆகர்ஷண சக்தி இருக்கிறதே அதைக் கண்டு பிடித்தவன் விஞ்ஞானி நீரில் உள்ள மின்சாரத்தை விஞ்ஞானி காண்கிறான். நீரில் மின்சாரத்தைப் பொருத்திய ஒருவரின் மூலதனம் தான் விஞ்ஞானியின் மூளைக்குப் புலப்படுகின்றது.

**விஞ்ஞானத்தின் தாய் மெஞ்ஞானம்:**

விஞ்ஞானியினுடைய மூளையைச் சிருஷ்டித்த மூலப்பொருள் எது? இறைவனது மூலப்பொருளை வைத்தே விஞ்ஞானி வியாபாரஞ் செய்கிறான் இறைவன் தான் எதற்கும் பெரிய மூலகர்த்தா. விஞ்ஞானத்தின் தாய் போன்றது மெய்ஞானம். விஞ்ஞான உலகம் மெய்ஞான உலகத்தைப் புறக்கணிக்குமானால் அது தாயைப் புறக்கணிப்பது போலாகும்

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற நமது சைவப் பேரறிஞர்கள் விஞ்ஞான வாழ்வை அறிந்திருந்தார்கள். ஆனால் அதை அவர்கள் ஆராய்ச்சி செய்யவில்லை. விபரீத வாழ்வை அவர்கள் விரும்பாததே அதற்குக் காரணமாகும்.

இறுதியாக நான் சொல்லக்கூடியது ஒன்றுதான். சைவ சித்தாந்தத்திற்கு நிகரான நெறி உலகத்திலேயே வேறு எங்கும் கிடையாது. இதை நாம் பூரணமாக அறிந்து கொள்ள வேண்டும். இறைவனை அடைவதற்குச் சுலபமான நெறிதான் சைவ சித்தாந்தம். அதன் மூலம் நாம் இறைவனை அடைந்து பேரின்ப வாழ்வை எய்தலாம்.

**ஒப்புவிக்காத வரையில் :**

எந்தப்பெரிய அதிகாரியாக இருந்த போதிலும் நாம் நமது தலையைப் பூரணமாக ஒப்புவிக்காத வரையில் முடியை வெட்டிக் கொள்ள முடியாது. முடியை வெட்டிக் கொள்வதற்கு முதலில் தலையை ஒப்படைக்க வேண்டியிருக்கிறது அதுபோல நாமும் இறைவனை அடைவதற்கு நம்மை அவனிடம் ஒப்படைத்து விடவேண்டும். ஆண்டவனிடம் நம்மை நாம் முற்றாக ஒப்புவிக்காத வரையில் நாம் அவனை அடைவது முடியாத காரியம். இதுதான் சைவ சித்தாந்தத்தின் உட்பொருளாகும்.

நன்றி : தினகரன் 1962 ஏப்பிரல் 20 இதழில்

**செல்லப்பா நடராசா**

---

தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1955ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி கொழும்பு விவேகானந்த சபையில் சைவசித்தாந்தச் செந்நெறி என்னும் பொருளில் பேருரை ஒன்றை நிகழ்த்தினார். அவ்வரிய உரையைப் பூரணமாகப் பதிவுசெய்து பேணியுள்ளார் மூத்த பத்திரிகையாளரானதிரு செல்லப்பா நடராசா. அடிகளாரது முடிவுரை மட்டும் இங்கே மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.

— ஆசிரியர்

---

★ ★ ★

# உடுழுகொடையின் பெருவாழ்வே!

கண்ணான காசியிலிருந்து கருணைவடி வாயெழுந்து
கதிர் / காமருடனே வந்த பெருமாட்டி
கண்ணிலருள் மிகுசுரந்து காட்சிபல காட்டியுமே
காரிலுப்பை மரநிழல்கள் மிகுதேடி
விண்ணவரும் போற்றுமுயர் வீரசக்தி வடிவாகி
விளங்கியொளி தானருளும் நிலைகூட்டி
திண்மையுறு முல்லையென திகழடியார் செப்பிடவே
திகழ்ந்தபதி தானிதுதன் நிலைமாற்றி
எண்ணமதில் யாருமிது எழில்மிகுந்த பதியெனவே
ஏற்றமுறக் கூறும்நிலை மிகுகூட்டி
தண்மையுறு மெய்ப்பதியே இன்னருளும் சுரக்குமென
தாரணியில் யாவருமே வியந்தோத
பண்புபெறு கன்னியர்க்கும் வாழ்வளிக்கும் வள்ளலென
பாரிலுனை யாவருமே கரங்கூப்ப
மண்மகிழ வாழ்வருளும் மாதுஸ்ரீ துர்க்கையம்மா
மாண்புதரு உடுழுகொடையின் பெருவாழ்வே!

ஆக்கம் : சு. குகதேவன் தெல்லிப்பழை

உ
சிவமயம்

# துர்க்காபுரத்தில் ஒரு சைவ மகளிர் இல்லம்

(08 - 02 - 1986 ஈழநாடு ஆசிரியர் தலையங்கம்)

அநாதரவுற்றவர்களை அதிலும், அநாதரவான சிறுவர்களைப் பேணுவதும், அவர்களின் வளர்ச்சிக்குதவுவதும் மாபெரும் புண்ணியம்.

சுயநல நோக்கமின்றி இம்மாதிரியான காரியங்களில் ஈடுபடுப வர்கள் மிகவும் குறைவு. அதிலும் கூட வசதியும் வாய்ப்பும் உள்ள இந்துக் கோவில்களின் நிர்வாகிகள் பொதுவில் இப்படியான விடயங் களில் கவனமே செலுத்துவதில்லை.

கோயிற் தர்மச் சொத்துக்களைக் கொண்டு கோயில்களின் அன் றாட சமயக் கைங்கரியங்களை மட்டும் சிறப்புறச் செய்து கொண் டிருந்து விடுகிறார்கள். இவர்களில் இன்னும் சிலர் இருக்கும் அமைப் புக்களை வருடத்துக்கு வருடம் உடைத்துக்கட்டி அலங்கரித்துக் கொண் டிருக்கிறார்கள். அபரிமிதமாகக் கிடைக்கும் வருமானங்களின் ஒரு பகு தியை அநாதைகளுக்கும், அறிவில்லாத ஏழைகளுக்கும் பயன்படும் வகையில் பயன்படுத்துவதோ அன்றி அன்றாடம் செய்யவேண்டிய பூஜைகளைக் கூட நிறைவேற்ற முடியாத நிலையிலுள்ள சிறு கோயில் களின் வளர்ச்சிக்கு உதவுவதோ இவர்களுக்கு ஒவ்வாத காரியம்.

இன்றைய இளைஞர் சமுதாயம் கோயில்களையும், கோயில் நிர் வாகங்களையும் பார்த்து முகம் சுழிப்பதற்கு மேற்படி நிலைமைகளும் காரணமெனலாம்.

கோயில் சமூகத்தையும், சமூகம் கோயிலையும் பற்றி நிற்க வேண் டும். அதற்கான வழிகளை உருவாக்கிக் கொள்வது கோயில் நிர்வாகி களையே சாரும். அந்த வகையில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமும், தேவஸ்தான நிர்வாகமும் முன் உதாரணமாகச் செயற் பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

கோயிலின் வளர்ச்சியும், தெய்வப்பணிகளும் சிறப்புறநடைபெற்று வரும் அதே வேளை கோயிலின் வாயிலாக சமூகபபணிகளும் அங்கு மெச்சும் படியாக மேற்கொள்ளப்பட்டு வருவது கண்கூடு.

சாதிமத பேதமின்றி நோயாளிகளைப் பேணும் ஆஸ்பத்திரிகளுக்கு நன்கொடைகள், சமய ஸ்தாபனங்களுக்கு, அநாதை இல்லங்களுக்கு நன்கொடைகள், பல்கலைக்கழக இந்து சமய பீடத்திற்கு நிதியுதவி, அகதிகள் புனர்வாழ்வுக்குதவி, மறைநூல்களை இலவசமாக வெளியிட் டுவுதல் போன்ற பல்வேறு சமூகப்பணிகள் இந்தக் கோயிலின் பெய ரால் இடம்பெற்று வருகின்றன. இவைகளுக்குச் சிகரம் வைத்தாற்

போல், அநாதரவான சைவச் சிறுமிகளைப் பேணி வளர்ப்பதற்கான மாடிக்கட்டடம் ஒன்றை துர்க்காபுரத்திலேயே இவர்கள் கட்டி முடித்து அண்மையில் திறப்பு விழா நடாத்தியுள்ளனர்.

சிறுமிகள் தங்கியிருக்கவும், கல்வி, தொழில் பயிற்சிகளைப் பெறவும் இங்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 16 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள சகல வசதிகளும் கொண்ட இந்த விசால மான மாடிக்கட்டடத்தில் அறங்காவல் குழுவின் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது மணிவிழாவின் போது சேர்ந்த அன்பளிப்புக்களில் ஒரு பகுதியை இங்கே ஒரு நூல்நிலையம் அமைப் பதற்கென்றே வழங்கியிருப்பதாக அறிகின்றோம்.

தெய்வீகப் பணியொன்றினைச் சிறப்புறச் செய்யும் ஒரு வாய்ப் பினைப் பெற்றுள்ள இவ்வம்மையார், அந்த வாய்ப்பின் வரப்பிரசாதம் சமூகத்தின் ஏனையவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதில் கருத் தாய் இருந்து வருவதையே இச்செயல் காட்டுகின்றது.

சோதனை மிக்க இக்காலத்தில் தமிழர்கள் ஈவிரக்கமின்றிக் கொலை செய்யப்படுவதனால் அநாதைகளாகி விடும் நம் சகோதரச் செல்வங் களுக்கு இப்படியான இல்லங்களே உறுதுணை அளிக்க முடியும்.

ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தின் முன் மாதிரி இன்னும் பல நிர்வாகங்களின் கண்களைத் திறக்கும் என்று நம்புவோம்.

கௌரவ ஆசிரியர்
ஈழநாடு

★ ★ ★

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி திரு அந்தாதி

ஆனந்தவல்லி அபிராமி செந்தமி ழாட்சி பொங்கத்
தானந் தொடர்ந்து மதுரை யமர்ந்த தடாதகையே
ஈனந் ததும்பும் தமியேனை யாளுத லொன்றுகோலோ
கானத் ததும்பிடும் தெல்லியூர்த் துர்க்கைக் கலாநிதியே.

கலாநிதி அருட்கவி சி. விநாசித்தம்பி புலவர்

## அன்னை அலங்காரம்

அடியாற் படியை அளந்த திருமால் அகழ்ந்தி வர்த்தும்
முடியா தயர்ந்தான் முதல்வன் அடியை முனைந்தறியத்
துடியா ழிடைச்சிவ சுந்தரி துர்க்கை தொழுதுணரும்
அடியா றறிவர் அரனார் கழலின் அன்னை அளவினையே.

'' இறை ஒளி '' நமசிவப்பிரகாசம் அவர்கள்

உ

சிறுவர் விருந்து

# பசுவின் பெருமை

அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள்

---

அன்பான பிள்ளைகளே,

அன்பு வணக்கம். எப்படி இருக்கிறீர்கள்? நலம்தானே? எல்லோருக்கும் நல்ல சுகவாழ்வு இறைவன் தரவேண்டும். இன்று பசுவின் பெருமையை விளக்கும் ஒரு கதை கேளுங்கள்.

பசு மிகவும் பயனுள்ள பிராணி. வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்களில் மிகவும் உயர்வானது பசு. சுவாமிக்குப் பூஜை செய்வதுபோல் பசுவுக்கும் பெரியவர்கள் பூஜை செய்வார்கள். கடவுளை — சிவபெருமானைத் துதிக்கின்ற தேவாரங்களிலும் புராணங்களிலும் பசுவுக்கும் வணக்கமும், வாழ்த்தும் சொல்லிப் பாடி இருக்கிறார்கள். சைவ சமயம் பசுவுக்கு மிக உயர்ந்த இடம் கொடுத்திருக்கிறது.

ஆபஸ்தம்ப மகரிஷி என்று ஒரு பெரும் தவயோகி இருந்தார். அவர் பலவகை தபசு செய்து பலவித சித்திகள் பெற்றவர். ஒருமுறை நர்மதை நதியுள் மூழ்கிப் பன்னிரண்டு வருட காலம் தவம் செய்தார். அவரது உடல் விறைத்துக் கட்டை போல நதியுள் கிடந்தது. ஒரு நாள் ஒரு செம்படவன் அந்த நர்மதை நதியில் மீன்பிடிக்க வலை வீசினான். மீன்கள் வலையில் நிறைந்ததும் வலையை வெளியே இழுத்தான். அந்த வலையில் மீன்களோடு இந்த ஆபஸ்தம்ப முனிவரும் அகப்பட்டு வந்தார்.

செம்படவன் திகைத்துப் போனான். முனிவரை வெளியிலே எடுத்து, வெய்யிலில் கிடத்தி உடலில் சூடுபடப் பண்ணினான்.

ஆபஸ்தம்ப மகரிஷி வெளிநினைவு வந்து எழுந்து உட்கார்ந்தார். மீனவன் அவர் காலில் விழுந்து, தான் தன் வலையில் அவரைப் பிடித்த கதை கூறி அவரிடம் மன்னிப்புக் கேட்டான், மகரிஷி அவனை அன்புடன் பார்த்தார். 'மகனே' நீ உன் வலையில் என்னைப் பிடித்ததால் இப்போது நான் உனக்கு உரியவன். எனது மதிப்பிற்குச் சமனான பொருளை உனக்குத் தந்து விட்டுத் தான் போகவேண்டும். நீ அரசனிடம் போய் இந்தச்செய்தியைச் சொல் என்று மீனவனை அரசனிடம் அனுப்பினார். அரசன் மகரிஷியிடம் வந்தான்.

ஒரு லட்சம் பவுணைத் தான் மீனவனுக்குத் தருவதாகச் சொன்னான் மகரிஷி மறுத்தார்.

அது போதாது என்றார்

'ஒரு கோடிப் பவுண்......' என்றான் அரசர்.

'அதுவும் போதாது!' என்றார் ரிஷி

அப்படியானால் எனது ராஜ்யத்தை கொடுக்கிறேன் என்றான் அரசன்

மகரிஷி சிரித்தார்

'கேவலம்! உனது அற்ப ராஜ்யம் எனக்குச் சமமாகுமா யாராவது நன்கு அறிந்த மகான்களைக் கேட்டுப்பார்'' என்றார்.

அரசன் திகைத்து நின்றான். தன் ராஜ்யமே அற்பமென்றால் மகரிஷிக்கு ஈடாகக் கொடுக்கத்தக்கது எதுவாயிருக்கும்? இரவு பகல் சிந்தித்தான்.

ஒரு தவ சிரேஷ்டரைப்பற்றி இன்னொரு தவ சிரேஷ்டர் தான் அறிய முடியும்......

மகரிஷி உலோமசர் என்ற மகானிடம் சென்றான் அரசன். வணக்க ஒடுக்கத்துடன் தனது பிரச்சினையைச் சொன்னான்.

ஆபஸ்தம்ப மகரிஷிக்கு ஈடாகக் கொடுக்கக்கூடிய மிக உயர்ந்த பொருள் எது? என்று பணிவுடன் கேட்டான்.

''விலைமதிப்பற்ற பொக்கிஷம் தாய்
பசு தாயினும் சிறந்தது.
பசுவைக் கொடு!'' என்றார் உலோமசர்.

அரசன் தெளிவுடன் திரும்பினான் அரண்மனைக்கு
மிகச் சிறந்த பசுவைக் கன்றுடன் மீனவனிடம் ஓட்டிச்சென்றான்.

ஆபஸ்தம்பர் மகிழ்ந்தார்.

''சரியான ஈடு!'' என்று பாராட்டினார்

பசுவை மீனவனிடம் ஒப்படைத்துவிட்டு, தமது பர்ணசாலைக்கு திரும்பினான் மகரிஷி

பசுவின் பெருமையை அறிந்த அரசனும் நிம்மதியுடன் அரண்மனை சென்றான்

பசு எவ்வளவு உயர்வானது பார்த்தீர்களா?
பசுவைப் போற்றிப், பாவம் தீர்ப்போம்.

---

## துர்க்கை அம்மன் வருகிறாள்

வருகிறாள் வருகிறாள் தேவி வருகிறாள் தேசமெல்லாம் காக்க அவள்
தேரினில் அமர்ந்து வருகிறாள் எல்லோரையும் காக்க வருகிறாள்.
துர்க்கை அம்மன் வருகிறாள் திரி சூலம் கையில் ஏந்தி
தீயோரை அழிக்க வருகின்றாள் அற்புதங்கள் செய்ய வருகின்றாள்.
இல்லம் தேடி வருகின்றாள் உள்ளம் கவர வருகின்றாள்
உண்மை நிலைக்க வருகின்றாள் உலகம் போற்ற வருகின்றாள்.

ஆக்கம் : திருமதி கிருஸ்ணசாமி கிரிசாம்பாள், மானிப்பாய்.

[ மிருகபலி பற்றி இந்து மதத்தின் நிலைப்பாடு என்ன ? என்ற தலைப்பில் ( 30-05-2003 — 20-06-2003 ) உதயன் பத்திரிகையில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் திரு. ச. முகுந்தன் அவர்கள் எழுதிய கட்டுரையை “அருள் ஒளி” வாசகர்கள் வாசித்துப் பயன் அடைய வேண்டி மீள்பதிப்பாக வெளியிடுகிறோம். ]

# சதைருசியை சமயமாக்கி இலாபமீட்ட முனையாதீர்!

( சென்ற இதழ் தொடர்ச்சி...... )

வேதங்களின் பிராமணப்பகுதியில் கூறப்பட்டிருந்த சில சடங்கு முறைகளுக்கு எதிரான கண்டனக் குரல்களாக உபநிடத சிந்தனைகளும்பௌத்தமும் மேற்கிளம்பியபோது அவற்றில் நியாயபூர்வமான சிந்தனைகளை பெருந்தன்மையோடு ஏற்று உள்வாங்கிக் கொண்டமை இந்து மதத்தினுடைய தனிச் சிறப்பாகும். இந்தச் சிறப்பைபற்றி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறிய கருத்தை நினைவூட்டிப் பார்த்தல் பொருத்தமானதாகும்.

‘‘இந்துமதம் காலத்துக்குக் காலம் தன்னைப் புதுப்பித்து வந்துள்ளது. அதன் நிலைபேற்றுக்கு இதுவே காரணம். கொள்கையிலோ ஒழுக்கத்திலோ மாற்றம் அடையாத இந்துமதம் ஒன்று இருந்ததில்லை. ஒரே முறையுடன் முடிவடையாமல் சதா வளர்ந்து கொண்டே இருந்தது இந்துநெறி. அது முடிவான வெற்றுக் கொள்கை விளக்கமன்று; அது வாழவேண்டிய வாழ்வியல். அது சிந்தனையிலோ வரலாற்றிலோ ஏற்படக்கூடிய எந்த ஒரு நெருக்கடியையும் சமாளித்து இயங்கக் கூடியது என்பதனை அதன் வரலாறு மெய்ப்பிக்கின்றது’’

இந்த வகையிலே, ஆரம்பநிலை சமூகங்களில் நிலவிய செம்மையுறாத சமய நம்பிக்கைகளுள் ஒன்றாகப் பலியிடுதல் காணப்பட்டாலும் காலத்துக்குக்காலம் தோன்றிய இந்துமத சீர்திருத்த சிந்தனைகள் இந்த நம்பிக்கையையும் அது சார்ந்த நடைமுறைகளையும் புதிய வடிவத்தில் மாற்றியமைத்து விட்டன என்பதே உண்மை. இன்று எமது சமயப் புலத்தில் பயன்படுத்தப்படுகின்ற குறியீட்டு நடைமுறைகள் பல இதற்கு சான்று பகரவல்லன. தென்னாட்டைப் பொறுத்தவரையிலும் வீரயுகம் என வர்ணிக்கப்படுகின்ற சங்ககாலத்தில் மிருகபலி சர்வ சாதாரணமாகக் காணப்பட்டது. முருகனுக்குப் படைக்கப்படும் ஆட்டுக்கடா இறைச்சி பற்றியும் அதன் குருதியில் வெண்மையான அரிசியைக் கலந்து அவற்றை பிரப்பங்கூடைகளில் படையல் செய்து முருகக் கடவுளை வழிபாடு செய்த பக்தர்களைப் பற்றியும் திருமுருகாற்றுப் படையில் குறிப்புக்கள் உண்டு.

‘‘மதவலிநிலை இயமாத்தாள்
கொழுவிடைக்
குருதியொடு விரை இத்தூ வெள்ளரிசி
சில்பலிச் செய்து’’

இதற்கும் மேலாய் ஆட்சியாளர்களின் வெற்றிக்காய் தம்முடைய தலைகளை தாமே அரிந்து தெய்வங்களுக்கு பலிதந்த போர் வீரர்கள் பற்றிய செய்திகளும் சங்க இலக்கியங்களுடாக அறியப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பதிற்றுப்பத்தில் 2ஆம் பத்து 17ஆவது அடியில் வருகின்ற

‘‘ஆடுநர் பெயர்ந்து வந்து
அரும்பலி தூவிஇ’’

என்ற அடியும் சங்கமருவிய கால இலக்கியமாகக் கருதப்படுகின்ற சிலப்பதிகாரத்

தில் இந்திரவிழா எடுத்த காதையில் இடம் பெற்றுள்ள

"மருவு மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கின் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பப் பீடிகை
வெந்திறல் மன்னனுக்கு
வெற்றியுண்டாகுக"

என்ற பாடலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

முன்னோர்கள் செய்தார்கள் என்ற சாக்குப்போக்கைச் சொல்லி மிருகபலியில் மும்முரம் காட்டுகின்றோரோ, நரபலியை யும் அதே முன்னோர்கள் செய்திருக்கின்ற னரே, என்ன தயாரா? ஏன் ஆட்டுக்கொரு நியாயம் ஆளுக்கொரு நியாயமா?

காலமாற்றம் பல கருத்தியல்களையே மாற்றிவிடுகிறது. சில பதங்களின் அர்த்தங் களையே காலம் உருமாற்றிப் போடுகிறது. எடுத்துக்காட்டாக வீரயுகத்தில் போர்க் களம் சென்று குருதி சிந்துபவனும் குருதி யைச் சிந்த வைப்பவனும் சான்றோர்கள் என்ற பதத்தால் விழிக்கப்பட்டனர். அற நூற்காலத்திலோ, ஈ, எறும்புக்கும் இடர் விளைவிக்காத அஹிம்சையாளர்களே சான் றோர்கள் எனக் கருதப்பட்டனர். பக்தி நெறிக் காலத்தில் இறைவனைச் சிக்கெனப் பிடித்து இடர்கண்டஞ்சாத மெய்யடியார் களே சான்றோர்கள். இங்கே வாள் வீர மும் தோள் வீரமும் அன்றி ஆன்மவீரமே அதிகமாகச் சிலாகிக்கப்பட்டது.

இதே போன்றுதான் பலியிடுதல் நடை முறையும் ஆரம்பநிலை சமூகங்கள் பெரும் பாலானவற்றில் ஏதோ ஒரு வகையில் சமய நம்பிக்கையாகக் காணப்பட்டது என்பது உண்மையே. ஏனெனில் கடவுள் மனிதனைப் படைத்திருக்கலாம் ஆனால் சடங்குகளும் வழிபாடுகளும் மனிதனால் படைக்கப்படு கின்றன. மனிதன் அந்த எல்லாம்வல்ல பரம்பொருளோடு தொடர்பு கொள்ள வெனத் தன்னளவில் ஆரம்பித்த முயற்சி களே இவையாகும். இந்த முயற்சிகளும் காலதேச வர்த்தமானங்களுக்கேற்பவும் அவரவரின் தனிப்பட்ட சமூக மனநிலைக ளுக்கு ஏற்பவும் வேறுபடலாம். எனவே, கிணற்றுத் தவளைகளின் தத்துப்பாய்ச்சல் களைக் காரணங்காட்டி சமுத்திரத்தின் விசாலத்திற்கு களங்கம் கற்பிக்க முயலக் கூடாது.

ஏனெனில் சிந்தனை உயர உயர ஆன் மீகம் சுடர்விடச் சுடர்விட மனிதம் விரிய விரிய சடங்குகளும் கூர்ப்படைந்து கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாகும். ஆட் டுக்கடாவை அரிந்து படைத்த அதே மானி டனின் பரம்பரையில் தான்

"கொல்லால் புலாலை மறுத்தானைக்
கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்ற திருவள்ளுவரும்

"மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோதெல்லாம்
எண்ணி என் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தை நின் திரு உளம் அறியும்"

"நலி தரு சிறிய தெய்வ மொன்றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டி
பலிதர ஆடுபன்றி குக்குடங்கள்
பலிகடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புத்தி நொந்துள நடுக் குற்றேன்"

என்று கூறிய இராமலிங்க வள்ளலா ரும் அவதரித்தனர் என்பதையும் நோக்கு தல் வேண்டும்.

ஈழநாட்டைப் பொறுத்தவரையில் ஆறுமுகநாவலரை விடவும் சமயவுணர்ச்சி உடைய ஒருவரை இன்று வரை நாம் கண்ட தில்லை. வேதாகம மரபுகளை ஒவ்வொரு சைவனும் முறையாகப் பின்பற்றவேண்டும் என்பதில் ஆறுமுகநாவரை விடவும் அக் கறை கொண்ட பிறிதொருவர் ஈழத்தில் இன்றுவரை பிறக்கவில்லை. பலதளங்களில் தன்னை பழைமை போற்றும் பண்பாள னாக, மரபுகளில் மரியாதை கொண்டவ ராக இனங்காட்டிக் கொண்டவர் ஆறுமுக நாவலர். ஆயினும், ஆலயங்களில் நடக்கும் அநாச்சாரங்களாக நாவலரால் கண்டிக்கப் பட்டவற்றுள் மிருகபலி நடைமுறையும் அடங்கும். 'நல்லூர்க்கந்தசுவாமி கோயில்' போன்ற நாவலர் வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களே இதற்குத்தக்க சான்றுகளா

கும். குறிப்பாக ஓர் எடுத்துக்காட்டை இங்கே சுட்டிக்காட்டலாம். அதாவது இவருடைய காலத்தில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவின்போது தேரின் உருளையிலே ஆட்டைப்பலியிடும் வழக்கம் நிலவியது. இவ்வாறு பலியிடுவதனால் தேர் தடங்கலின்றி ஓடி மீளாது என்ற நம்பிக்கையும் அக்கால சமூகத்தில் நிலவிவந்தது. இத்தகையதொரு கருத்தமைவை அறிவியல் விஞ்ஞானம் அறிந்த ஒரு பகுத்தறிவாளன் தளத்தில் நின்று பின்வருமாறு எள்ளிநகையாடியுள்ளார்,

'' எத்தனையோ ஆயிரம் பேர் ஏறிய
பிரமாண்ட புகைக்கப்பல்கள்
பலிகொடாதொழியவும்
சமுத்திரத்திலே நெடுந்தூரம் ஓடி இடையூறு
ஒரு சிறிதும் அடையாது
திரும்புகின்றனவாம்
......இவ் யாழ்ப்பாணத்தில் இவ்வொரு
சிறு தேரோ பலிகொடா தொழியின் ஓடு
நிலைக்கு வராதாம் ''

வேதங்களை மதிக்கின்ற நாவலருக்கு வேதங்களில் மிருகபலி பற்றிய செய்திகள் எட்டவில்லையா? திருமுருகாற்றுப்படையில் முருகனுக்கு ஆட்டுக்கடாவை அறுத்து நிவேதித்தார்கள் என்பதனை அறியாமலேயே திருமுருகாற்றுப்படைக்கு உரை எழுதினரா? சாத்திரம் பேசுவோர் சற்றே சிந்திக்க வேண்டும். சாஸ்திர சம்பிருதாயங்களுக்கு மதிப்புக் கொடுத்த நாவலர் கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டிருந்தார் என்பதே உண்மையாகும்.

மனிதனை மனிதனாக்கும் மதந்தான் இன்று நமக்குத் தேவை எனக்கூறிய வீரத் துறவி விவேகானந்தர் ஆன்மீக வாழ்க்கை பற்றிக் குறிப்பிடும்போது பின்வருமாறு கூறியுள்ளார். பலியிடுதல் நடைமுறையை அவருடைய கருத்தோடு சற்று ஒப்புநோக்கிப் பாருங்கள்.

'' ஆன்மீக வாழ்வுக்கு, மனதுக்கோ
உடலுக்கோ பலவீனத்தை உண்பெண்ணும்
எதையும் உன் கால்விரலாலும் தீண்டாதே
மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும்
ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய
வாழ்க்கையாகும்
மனித உடலுக்குள் அடக்கி வைக்
கப்பட்டிருக்கின்ற
எல்லையில்லாத சக்தி விரிந்து பரந்து
கொண்டேயிருக்கிறது
இதுதான் மனிதனுடைய வரலாறு
நாகரிகத்தின்
வரலாறு முன்னேற்றத்தின் வரலாறு
ஆகிய அனைத்துமாம் ''

எனவே, இந்துக்களே சற்றுச் சிந்தியுங்கள்! சனாதன தர்மத்தில் தளராத பற்றுறுதி கொண்டவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பலியிடுதலை ஆதரிக்கமாட்டார்கள். இதயத்தால் இந்துக்களாக வாழ நினைப்போர்களுக்கும் சதைருசியை சமயமாக்கி இலாபம் ஈட்ட முனைகின்றவர்களுக்கும் இந்தக் கட்டுரை சமர்ப்பணம்.

---

## அருள் ஒளி வாழிய ! வாழியவே !

ஆவணியோண நன்நாளில்
ஆண்டொன்று அகவையில் எங்கள்
நாவணியாள் தரணிகாக்கும்
தாயவள் '' அருள் ஒளி ''
நவயோகமளிப்பவள் நல்லருள்
ஆட்சி விழுமியங்களைத்
தவமெனவே பிரசுரிக்கும்
உன்பணி வாழிய வாழியவே !

**ஜெயஹேமலதா**
தொட்டிலடி

தொடர் - 6



# சிறுவர் கந்தபுராண அமுதம்

— மாதாஜி

## 19. முருகப் பெருமானின் விசுவரூபம் :

உலகிலே இருக்கின்ற சமுத்திரங்கள், மலைகள், திசைகள், திக்குகள், எல்லா முனிவர்கள், தேவர்கள், ஞானிகள், எல்லாத்தேவர்கள், தேவதைகள், கடவுளர்கள், பல வகையான உயிரினங்கள் தன் விசுவ உருவத்தில் தோன்ற மாபெரும் விசுவ ரூபம் கொண்டார்.

முருகப் பெருமான் விசுவ ரூபா தரிசனம் தந்த போது, சுவாமியின் திருவடிகளில் ஏழு பாதாள உலகங்கள் காணப்பட்டன. ஏழு தீவுகளின் தன்கள் கணைக்காலில் காணப்பட்டது. ஏழு கடல்கள் சுவாமியின் ஆடையில் காணப்பட்டன. சுவாமியின் தோள்களில் திசைகள் காணப்பட்டன. இவ்வாறு சுவாமியின் அங்கங்களில் எல்லாம் உலகிற் காணப்படுகின்ற அசையும் அசையாப் பொருட்கள் யாவும் தோற்றமளித்தன.

அதுபோல சுவாமியின் முகங்களில், சந்திரன் சூரியன் அக்கி என்பன அழகிய கண்களாக அமைந்து காணப்பட்டது. கேசத்தில், (தலைமயிரில்) மேகங்கள் காணப்பட்டன. கேசங்களில் காணப்பட்ட மலர்கள் போல நட்சத்திரங்கள் காணப்பட்டன. சிவப்பரம்பொருள் சுவாமியின் ஆன்மாவிலும் சிவசக்தி மதியிலும், விஷ்ணு இடப் பாரிசத்திலும் மற்றைய தேவர்கள் வலப் பாரிசத்திலும் காணப்பட்டனர். வாக்கில் சரஸ்வதியும் இலட்சுமி திருநிலையிலும் காணப்பட்டனர். இவ்வாறே மற்றைய தேவதைகளிலும் ஒவ்வொர் இடத்திலும் காணப்பட்டார். சுவாமியின் பேரொளி தரிசனம் கண்ட தேவர்கள் ஒன்றிப் போய்க் காணப்பட்டார்கள்.

தேவர்கள் முருகப்பெருமானை வேத வாக்கியங்களால் துதித்தார்கள். ஆனந்தக் கூத்தாடினார்கள். முருகப்பெருமான் தனது விசுவரூப வடிவத்தை மறைத்து ஆறுமுகங்களுடன் முன்னைய வடிவத்தில் காட்சி தந்தார். முருகப் பெருமானின் கருணை வடிவம், கருணையின் உள்ளம் கண்டு தேவர்கள் வியந்தார்கள். இந்திரன் தனது அரசு முதலியவற்றை, முருகப் பெருமானை ஏற்றுத் தம்மை அடிமைகளாக ஏற்கும் படியும் வேண்டினார்கள்.

தம்மை உள்ளன்போடும் பக்தியோடும் வழிபடும் பக்தர்கட்கு, இகம், பரம், வீடு முதலியவற்றை அருளும் கருணை வள்ளலாகிய முருகப் பெருமான், இந்திரனின் அறியாமை கண்டு புன் முறுவல் செய்தார்.

முருகப் பெருமான் இந்திரனை நோக்கி, நீ எமக்குத் தந்த அரசை உமக்கே திரும்பித் தந்தோம். நீங்கள் சேனைகள் நான் சேனைகளின் தலைவன் சேனாதிபதி. விரைவில் அசுரரை வெல்லுவேன். அவர்களை விரைவில் வேருடன் அழிப்பேன். நீங்கள் வருந்தாதீர்கள் என்று அருளி னார் தேவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

## 20. முருகன் ஆட்டுக் கடாவை வாகனமாய் ஏற்றல் :

முழுமுதற் பொருளாகிய சிவபெருமானின் விருப்பத்திற்காக நாரத முனிவர் யாகம் செய்ய நினைத்தார். ஆகமத்தில் கூறியபடி யாகசாலை அமைத்து வேதங்கள் ஓதி மாபெரும் யாகம் செய்தார்கள். வேதம் ஓதும் போது மந்திரங்கள் உச்சரிப்பில் மாறுபட்டன. இதனால் யாகத் தில் இருந்து செந்நிறமான மாபெரும் ஆட்டுக் கடா வெளியே வந்தது.

பயங்கர உருவத்துடன் யாகத் தீயில் இருந்து வெளியே வந்த ஆட்டுக்கடா சினத்துடன் ஆரவாரம் செய்தது. கிணறு வெட்டப் பூதம் வெளிப்பட்டது போல பிள்ளையார் பிடிக்கப் பெருங்குரங்கானது போல, நன்மைகளைச் செய்த இந்த மாபெரும் யாகத்தில் இருந்து இக்கொடிய வடிவ ஆட்டுக்கடா என்னவெல்லாம் செய்யுமோ எனத் தேவர்கள் அஞ்சி ஓடத் தொடங்கினார்கள். நாரதரும் முனிவரும் தேவர்களும் பயந்து கயிலை மலையை அடைந்தார்கள். மலையின் மீது ஏறினார்கள். அப்போது எல்லாம் வல்ல கந்தப் பெருமான் விளை யாடிக் கொண்டிருந்தான். கந்த வேளுடன் இலட்சத்து ஒன்பது வீரர் களும் கூடி விளையாடுவதை நாரத முனிவர் முதலானோரும் தேவர் களும் கண்டார்கள்.

முருகனைக் கண்ட தேவர்கள் முதலியோர் சந்திரனைக் கண்ட கடல்போல மகிழ்ந்தனர். பின்னர் நாரதர் முதலாகத் தேவர்கள் தாங்கள் செய்த யாகத்தில் இருந்து தோன்றிய அசுர ஆட்டுக்கடாவின் கொடு மைகள் அட்டூழியங்கள் பற்றி முருகப்பெருமானுக்குக் கூறி வருந்தி னார்கள். அப்போது முருகப்பெருமான் தேவர்களைப் பயப்பட வேண் டாமென்று கூறினார். வீரவாகு தேவரை அழைத்து அந்த ஆட்டுக்கடா வைப் பிடித்துவாவென்று பணித்தார்.

முருகப் பெருமானின் அன்புப் பணிப்பைச் சிரமேற் கொண்டு, அந்த அசுர ஆட்டுக்கடாவைத் தேடிப் புறப்பட்டார்.

அந்த அசுர ஆட்டுக்கடாவானது பூமியெங்கும் உலாவி அங்கு உள் ளவர்களை உதைத்துச்சிதைத்து வீழ்த்தியது. பின்னர் வானுலகம் சென்றது. அங்கும் பல கெடுதிகளைச் செய்தது. பின்னர் நான்முகனின் சத்திய உலகமாகிய சத்திய லோகத்தில் இறுமாந்து ஆரவாரித்து நின்றது.

வீரவாகு தேவர் ஆட்டுக் கடாவைத் தேடி சத்திய உலகம் சென்றார். அங்கு ஆட்டுக்கடா கழுத்துமணியை அசைத்துக் கொம்பை நிமிர்த்தி இறுமாந்து நின்றதைக் கண்டார். விரைவாகச் சென்று அதன் கொம்பைப் பற்றிக் கரகரவென்று சப்தம் உண்டாகுமாறு இழுத்துக் கொண்டு முருகப்பெருமான் முன்நிறுத்தினார். தேவர்கள் வீரவாகுவின் அற்புதச் செயல் கண்டு ஆனந்தம் கொண்டார்கள்.

இனி உங்கள் துயர்நீங்கி விட்டது நீங்கள் உங்கள் இடங்களுக்குச் செல்லலாம் என்று தேவர்கட்கு முருகப்பெருமான் பணித்தார் தேவர்கள் முருகப்பெருமானை வணங்கி நாங்கள் காணத் தேவரீர் இந்த ஆட்டுக்கடாவை தங்கள் வாகனமாக்கியருள வேண்டுமெனப் பிரார்த்தனை செய்தார்கள்.

இவ்விடத்தில் நாம் சற்றுச் சிந்திப்போம் மிகவும் கொடியவர்கள் அடியவர்களைவிட மிகவும் பாக்கியசாலிகளாவார்கள். சிவபெருமானைக் கொல்ல தாருகவனத்து இருடிகள் முயலகனை அனுப்பினார்கள். ஆனால் அந்த கொடிய முயலகன் இன்றும் நடராச வடிவுடன் சிவபெருமான் நடனமாட அவரின் பாதஅடியில் முயலகன் இன்பமனுபவிக்கிறான்.

கயமுகா சூரன் என்ற அசுரன் ஒருவன் இருந்தான் அவன் தேவர்களை வருத்தி வந்தான். தம் குறைகளைத் தேவர்கள் விநாயகப்பெருமானிடம் முறையிட்டார்கள். விநாயகப்பெருமான் கயமுகாசூரனுடன் போர் செய்தான். கயமுகாசூரன் மூஷிகமாய் மாறி விநாயகப்பெருமானின் வாகனமானான். மகிடன் துர்க்காவுடன் போர்செய்து சிங்க வாகனமாகினான் சூரன் கூட முருகப்பொருமானுடன் போர் செய்து சேவலும் மயிலுமாகி இன்றும்முருகப்பெருமானுக்குப் பணிபுரிகிறார்கள்.

தேவர்களின் வேண்டுதலின்படி முருகப்பெருமான் ஆட்டுக்கடாவை வாகனமாக்கி அதில் ஏறிச்சென்றார். சென்ற முருகன் தனது இலட்சத் தொன்பது சகோதரரோடு விளையாடிக்கொண்டிருந்தார். தேவர்களும் முருகனின் அற்புத விளையாடல்களை வியந்தபடி தத்தம் இடங்கட்குச் சென்றார்கள்.

## "அருள் ஒளி" வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

"அருள் ஒளி" மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான, தரமான, ஆக்கங்களை நாம் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி.

ஆசிரியர்
"அருள் ஒளி"
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்
"அருள் ஒளி"
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

உ

# இறைவழிபாடு செய்வோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

இன்று மெத்தப்படித்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் சிலர், கடவுள் உண்டு என்று சொல்வதற்குக் கூச்சப்படுகிறார்கள். திருக்கோயில் சென்று இறைவனை வழிபாடு செய்வது, தேவையற்றது என்று கூறிவருகிறார்கள். சைவ அநுட்டானங்கள், ஒழுக்கங்கள், விரதங்களை மேற்கொள்ளல் என்பவற்றை உதாசீனஞ் செய்கிறார்கள். திருநீறு அணிந்து செல்வதற்கும்; சந்தனம், குங்குமம் இட்டுக்கொள்வதற்கும் வெட்கப்படுகிறார்கள். இத்தனைக்கும் காரணம், அவர்கள் படித்த படிப்புத்தான் என்பது தெரியவருகிறது. படித்ததினால் பகுத்தறிவு பெற்றார்களாம் பகுத்தறிவு தான், இவ்வாறு கடவுள் இல்லையென்றும்; சைவ ஒழுக்கங்கள் அர்த்தமற்றவையென்றும் அந்தப் படித்த மனிதர்களைப் பேசவைக்கிறது போலும். இவர்கள் என்னத்தைப் படித்தார்கள் என்று எம்மை நினைக்கவைக்கிறது. இவர்களின் இத்தகைய செயற்பாடுகள்.

இத்தகையவர்களின் படிப்பு, அவர்களின் பகுத்தறிவை வளர்க்கவில்லை; மாறாக, அவர்களின் பகுத்தறிவைப் பறித்து விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது.

எத்தகைய கல்வியைக் கற்றாலும், அக்கல்வியின் அதியுயர்ந்த நோக்கம், கடவுள் உண்டு என்பதை ஏற்று, கடவுளை வழிபடுதலுக்குக் கற்போனை இட்டுச் செல்வதாகும். மெய்ஞ்ஞானிகள் காட்டிய வழி இதுவாகும்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

> '' கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழா ரெனின் ''

என வினா எழுப்புகிறார். கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் கடவுளை வழிபடுதலாகிய ஒழுக்கம் ஆகும். கடவுளை வழிபடுதலுக்கு ஒருவனை இட்டுச் செல்லாத கல்வி, பயனற்ற கல்வி. அத்தகைய கல்வியைக் கற்றவர்களைவிடக் கல்லாதவர்கள் மேலானவர்கள்.

'' கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி '' யாக இறைவன் விளங்குகிறான்.

> '' கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கரை யூரிற்
> பாண்டிக் கொடுமுடி...... ''

எனத் தேவாரத்திலும் கல்வி கற்றவர்கள் இறைவனைத் தொழுவார்கள்; ஏற்றிப் போற்றுவார்கள் எனக்குறிப்பிடப்படுகிறது. அப்படியிருக்க,

இன்றைய காலத்தில் கற்றவர்கள் கடவுளை வழிபாடு செய்தலை மறுக்கிறார்கள் என்றால் அவர்கள் நல்லபடி வாழ மறுக்கிறார்கள் என்பதுதான் பொருள்.

எதைப்படித்தாலும் அப்படிப்பின் நீண்ட காலப் பயன் கடவுளை வழிபடுதல் ஆதலால், சமயக் கல்வியைக் கற்றுத்தேறுவதன் பயன், கடவுளை வழிபடுதலும்; சைவஆசார, அநுட்டானங்களைப் பேணுதலும்; சைவ நெறிநின்று ஒழுகுதலும் என்பதை யாரும் மறுத்தலாகாது; மறுக்கவும் முடியாது.

அன்பு நிறைந்ததாயும், பக்தி நிரம்பியதாயும் கடவுளைப் பூசித்தல், தியானித்தல், ஆராதித்தல் என்பன ஒருவருக்குச் சித்தித்துவிட்டதாயின், அதைவிட அவர் கற்ற கல்வியால் அடைந்த பயன், வேறெதுவும் இருக்க முடியாது. உண்மையில் அத்தகையவரே, உண்மைக் கல்வியைப் பெற்றவராவர்.

கடவுளை முறைப்படி வழிபடுதலாவது, கடவுளிடம் பணம் தா, பண்டம் தா, வெளிநாடு செல்ல அனுமதி எடுத்துத்தா, நோயைத்தீர், பகையைத்தீர், அதைத்தா இதைத்தா என்று கோரிக்கைகள் விடுவதல்ல; கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் கோபித்துக் கொள்வதுமல்ல.

> "யாம் இரப்பவை பொருளும், பொன்னும், போகமுமல்ல,
> நின்பால் அருளும் அன்பும் அறனும்"

தான் என கடவுளை முறையாக வழிபடுவதற்கு வழிகாட்டுகிறார் ஓர் அருளாளர். இறைவனிடம் நாம் கேட்கவேண்டியவை அவனின் அன்பு, அருள், அறன் என்பவற்றைத்தான் என்பதை உணர்ந்து, இறைவனை முறைப்படி வழிபட்டு உய்வு பெறுவோமாக.

---

## தீர்த்தமாடும் வேளை

போற்றுதற்குரிய பொன்னான நாளன்றோ அன்னை
அற்புதங்கள் அகில மெல்லாம் பிரகவித்தோடும் இந்த
ஆவணித் திங்கள் திருவோண நாளாம் திகழ் ஒளியாள்
தீர்த்தமாடும் வேளை — பாழ் பட்ட துயர்கள் ஓட
பாரினில் இனி மெல்ல அமைதி திரும்புமே!

**பஞ்சாமிர்தபாலன்**
கொக்குவில்

உங்கள் அபிமான 'அருள் ஒளி' கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்
கோவில் வீதி
நல்லூர்.

# தெல்லிநகர், உழுகுடைப்பதித் துர்க்காதேவி பதிகம்

## காப்பு

### வெண்பா

*சீரார்நற் றெல்லிநகர் சேரே ருழுகுடைவாழ்*
*பாரார்துர்க் காதேவிப் பண்ணவிக்கு — நேரார்வத்*
*தாற்பதிக மோதவுயர் தந்திமுகத் தெந்தையிரு*
*காற்சதவம் போருகப்பூக் காப்பு.*

### ஆசிரிய விருத்தம்

*உலகமொரு மூன்றினுங் குலவுபற் பலகோடி*
*யோனிபே தங்களாகி*
*ஊர்வநீர் வாழ்வதத் துவநடப் பனநிற்ப*
*வுயரப் பறப்பதவழ்வ*
*நிலவவரு மக்கள்வகை வகையாத வின்றுமிக*
*நீடருள் சுரந்தவைகடம்*
*நினைவறிந் திருகண்க ளிமையாம லிரவுபகல்*
*நீங்காம லுடனிருந்து*
*அகிலபோ கங்களையு முட்டியன் பொடுவளர்த்*
*தாதரித் தீடுமன்னையே*
*அடியரனு தினமுமுண் டானந்த முறவைகு*
*மரியவா னாவமிர்தமே*
*திலகவா ணுதலணங் கேயெனது துயரெலாந்*
*தீரவருள் செய்யம்மணீ*
*தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்*
*செல்வி துர்க் காதேவியே.* 1

*எந்தநா ளெந்தவகை வந்துபந் தித்ததிங்*
*கென்னைமல மென்பதறியேன்*
*ஏதிலாக் கற்பங்க ளெண்ணிலெண் ணிலவாய்*
*இருட்டல மிருந்ததறியேன்*
*அந்தநடு வாதியில் லாதமக மாயிநின்*
*அருளினா லறிவுதோன்றி*
*அமலமாம் வகையற்ப புல்பூடு மரமாகி*
*யாமெழு வகைப்பிறப்பாய்*

வந்துவந் தேபோவ தறியே னினிச்செயும்
வண்ணமே தென்பதறியேன்
வரமருவு முன்சரண் போற்றவறி யேன்சாண்
வளர்க்கவகை தேடியோடிச்
சிந்தைநொந் தேயயரு மறிவிலேன் குறையெலாந்
தீர்த்தருள்செய் வாயம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்வி துர்க் காதேவியே. 2

மலமாயை கன்மவிரு ளிடையன்று விழவந்த
வகையொன்று மறியாப்பெரும்
மதிகெட்ட வென்னையிப் படியின்று வரையுமிவ்
வகையாற்றொ ணாதமிடியால்
நலனொன்று மின்றியுயி ரொடுசெத்த பிணமாகி
நாடொறும் வாழவைத்தாய்
நாமுன் னருளுக் கடாதன்னை யேயீது
நானுனது மைந்தனன்பாய்
இலகுமிரு குழையருகு பொருதுசெவ் வரிசிதறி
இருவயில் களைப்பழித்த
இணைகயல் கண்ணினா லென்முகம் பார்த்துலக
வின்பெல்லாந் தந்துயாருஞ்
செவ்வரிய தாயடியர் செல்கதிய தானபர
சிவபதமு மிந்தருள்செய்வாய்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்வி துர்க் காதேவியே. 3

அருளோங்கு மானந்த வல்லிநா லெண்வகை
அறங்களை வளர்த்தசெல்வி
அயனாதி முப்பத்து முக்கோடி தேவர்நிதம்
அடிபரவு மிறைவிபோதப்
பொருளோங்கு முயர்வத் தோரரும் கதியைப்
பொருந்தவழி காட்டுமனையே
பொருளிலேன் றாய்தந்தை தமருதவி தானிலேன்
புவியிலொரு சுகமுமில்லேன்
மருளோங்கி நிறைமனத் தேனிகம் பரமான
வாழ்வினும் தாழ்வுறுவனோ
வந்துவந் தேபோன வாழ்வினால் நொந்துளம்
வாடுமென் முகம்நோக்கியே
தெருளோங்கு முயர்கல்வி செல்வமும் தந்துதுயர்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்வி துர்க் காதேவியே. 4

பெறுமெலாப் பிறவியினும் மானுடப் பிறவிதான்
பெறலரிய தென்றுபெருநூல்
பேசும்இப் பிறவியை யெடுத்துப் பெறும்பேறு
பெறவிடாக் கொடுமைசான்ற
வறுமைவந் தென்குலங் கல்விசெல் வங்குணம்
வடிவெல்லாங் குடிபோக்கவே
மதிவாடி னேன்றருண மீதருள்வை இந்திரன்
வானோ ரிடும்பைநீங்கக்
கறுவுகொ ளுளத்தொடுறு சமமொழித் தருளிலாக்
கள்ளவசு ரக்கிளையுடன்
கருதுகா சிபமுனிப னொடுசேர்ந்து மாயைதரு
காதலன் சூரபதுமச்
செறுநனைச் செற்றவறு முகவனைப் பெற்றவுயர்
திருவுற்ற பெருநங்கையே
தெல்லிநக ருழுகுடைப பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 5

பங்கய மலர்ப்பதத் துணைகளும் பரிபுரம்
பாடகம் பாதசரமும்
பைங்கொடியை நிகரிடையு நிகரில்பட் டுடையுமருள்
பகிரபய வரத கரமும்
துங்கதொடி சூடகமு மாகமுத் தாரமுந்
துயல்ரத்தி னக்குழைகளும்
சோதிவிடு திருவதன முடனேழை யேன்முன்
துலங்கவந் தருள்புரிகுவாய்
திங்களைத் தீண்டுபல வின்கனிகள் கீண்டுமாத்
தீங்கனிகள் சிதறிவாழைச்
செங்கனிக ளைத்துவைத் துக்குருகி னம்வெரீஇச்
சேவல்பெடை யோடுமிரியத்
தெங்கில்முதிர் பழமுதிரும் மங்குல்படி சோலையும்
செந்நெல்விளை கழனியும்சூழ்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 6

அந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
அமரிசங் காரிகௌரி
ஆறட்ச ரத்திபுர நேமிக் கரத்திவலி
யாரம் பணத்திநிகரில்
சுந்தரி நிறைந்தபர மானந்தி நித்தியச்
சுகசோப னத்திவாய்ந்த
சூலியெண் டோளியயி ராணிமுத லானவுயர்
சூரம் பையரிறைவியே

தந்தைநீ தாயுநீ தமருநீ கனம்மிக்க
சகலபாக் கியமும்நீயே
தரணியி லுனையன்றி வேறுதுணை யிலைஎனது
சஞ்சலமெ லாம்நீக்கியே
சிந்தைமகிழ் நீடவரு பந்தமரு ளோடவுறு
தீவினைகள் வாடவருவாய்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 7

நாரணன் மலரிலுறை யாரணன் புகழிலுயர்
நான்மருப் புளவாரணன்
நவையிலா தீத்தர்மல முத்தரா னோரெல்லாம்
நவிலுமா சாரமொருவிப்
பேரணங் கொடுபணித் திடுதொண்டு களைஎல்லாம்
பிழையிலா தேயியற்றிப்
பீடழிந் தவசமுற நாடொறும் வினைகொண்டு
பெருமிதந் தோடுகருணைக்
காரண மடாதுற்ற மகிடா சுரன்மிகக்
கறுவியெதிர் பொருதஞ்சியே
கரவிலொரு வன்னிமர மாகவெட் டித்துண்டு
கண்டுஅண்டர் வாழவைத்த
சீரணங் கேயுனது புகழெனது நாவினால்
செப்பவெளி தோவம்மணி
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 8

மாருதப் பிரவல்லி திசையுக்கிர சோழனருள்
மகளுற்ற சூன்மவலியும்
மாமுகமும் நீக்கியவர் மகளென வனப்பருளி
மாவிட்ட புரமென்றுநற்
பேருலவ விட்டுஉல கினிற்கொடிய மிடிகவலை
பிணியொன்று மணுகாமலே
பேறுதரு கோயில்கொண் டாசகல் விழாப்பவனி
பேசுமயில் மீதுவந்து
ஆருமயல் தீரவருள் விளையாடல் செய்துவரு
மறுமுகக் குமரேசனை
ஆர்வமொ டெதிர்த்துஉப சரித்திடவு மடியருறு
மாகுல மகற்றிமேலாஞ்
சீருமுயர் கல்விஞா னம்பே றளிக்கவுந்
திருவுளங் கொண்டெழிலுறும்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே 9

பந்தபா சத்தினால் பந்தித்து மதிகெட்ட
பாவியான் செய்தபிழைகள்
பலகோடி யெனினுமவை யாவும் பொறுப்பதுன்
பாரமெனை யீன்றதாயே
எந்தனுடல் பொருளாவி மூன்றுமுன் றனதாக
வீந்தே னெனக்குஇங்கினி
ஏதொன்று மில்லையெல் லாமுன்ன தேதகா
தென்னைக்கை விடல்சென்னிதான்
வந்திக்க விழிகள்தரி சிக்கக் கரங்குவிய
வரவலந் தாள்கள்வாழ்த்த
வாய்செவிகள் கேட்பவரி தாயபுக ழோடுதிரு
வடியையனு தினமுமனமே
சிந்திக்க வும்வரந் தந்தருள வேணுமென்
சென்மசா பலியமாகத்
தெல்லிநக ருமுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே.

## அபிராமிப் பட்டர் அபிராமியந்தாதி

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரணம் அரண்நமக்கே.

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

குயிலா யிருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலாய ருக்கன் இமவா னளித்த கனங்குழையே.

உ

# நூற்பதிப்புப் பணியில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

துர்க்காதேவி பதிகம்
*அராலி அன்பர் – 1924*

துர்க்காதேவி ஆலய வரலாறு
*ஏழாலை, பண்டிதர் மு. கந்தையா அவர்கள், பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ வ. சுகசர்மா, தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆகியோரின் தொகுப்பு – 1963*

துர்க்காதேவி பாமாலை
*அளவெட்டி, அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்*

ஸ்ரீ துர்க்காதேவி தோத்திரம்
*வட்டுக்கோட்டை, துர்க்காதாசன் திரு. த. கந்தசாமி அவர்கள்*

திருவிளக்கு வழிபாடு
*தேவஸ்தான வெளியீடு*

நவராத்திரிப் பாமாலை
*தேவஸ்தான வெளியீடு*

அன்னை துர்க்கா அருட்பெயர் நூற்றெட்டு
*ஆவரங்கால், பண்டிதர் திரு.ச. சுப்பிரமணியம் அவர்கள்*

தெல்லியூர் ஸ்ரீ துர்க்காதேவி அநுபூதி அந்தாதி
*அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் – 1976*

துர்க்காதேவி தேவஸ்தான சித்திரத்தேர் சிறப்புமலர்
*தேவஸ்தான வெளியீடு – 1978*

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேக மலர்
*தேவஸ்தான வெளியீடு – 1981*

மகாகும்பாபிஷேக வெளியீடு
*துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்*

துர்க்காதேவி அந்தாதி
*திருப்பாதிரிப்புலியூர், சைவப்புலவர் க. பா. வேல்முருகன் அவர்கள்*

சென்னை சைவசித்தாந்த சமாஜ மாநாட்டு பவளவிழா மலர்
*தேவஸ்தான வெளியீடு – 1981*

தெல்லிப்பழை அன்னை துர்க்காதேவி திருப்பள்ளியெழுச்சி
*அளவையூர் கவிஞர் திரு. செ. கதிரேசர்பிள்ளை அவர்கள் – 1982*

தடாகப் பிரதிஷ்டை மலர்
*தேவஸ்தான வெளியீடு – 1982*

துர்க்கா துதி
*வயாவிளான் திரு. க. ஸ்ரீதரன் – 1983*

அபிராமி அந்தாதி
*தேவஸ்தான வெளியீடு – 1987, 1988, 1990, 1997, 2002.*

திருத்தொண்டர் பெரிய புராணம்
*தேவஸ்தான வெளியீடு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (மறுபதிப்பு) – 1983*

துர்க்காதேவி திருவந்தாதி
*அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்*

அரியதும் பெரியதும் 1ஆம் பாகம்
*கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் – 1984*

சைவ போதம் 1ஆம் புத்தகம்
*சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் அவர்கள் – 1984*

சிவத்தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்
*மணிவிழா மலர் – 1985*

சிவத்தமிழ்ச் செல்வம்
*மணிவிழா மலர் – மணிவிழா மலர்கள் – 1985*

சிவத்தமிழ் இன்பம்
*மணிவிழா மலர் – 1985*

துர்க்காதேவி தேவஸ்தான துர்க்காபுரம் மகளிர் இல்லச் சிறப்பு மலர்
*தேவஸ்தான வெளியீடு – 1986*

"வாழும் வழி"
*கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்*
*அறநிதிய வெளியீடு – 1987*

கந்தபுராண வரலாற்றுச் சுருக்கம்
*அளவெட்டி பண்டிதர் மா. மாணிக்கம் அவர்கள்*
*தேவஸ்தான வெளியீடு – 1989*

சுவாமி இராமதாஸ் அருளுரைகள்
*தெல்லிப்பழை ம. சி. சிதம்பரப்பிள்ளை (தமிழாக்கம்)*
*தேவஸ்தான வெளியீடு – 1989*

"இலண்டனில் ஏழு வாரம்"
*துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் – 1988*

அரியவும் பெரியவும் 2ஆம் பாகம்
*கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் – 1988*

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஸ்தோத்திரம் தமிழ் விளக்கத்துடன்
*அறநிதிய வெளியீடு – 1990*

Sri Durgadevi Temple Pandit M. Kandaiah

சைவக் கிரியைகளும் விரதங்களும்
*அறநிதிய வெளியீடு – 1991*

கூட்டு வழிபாட்டுப் பாமாலை
*தேவஸ்தான வெளியீடு (9 பதிப்புக்கள்) – 1990 - 2002 வரை*

துர்க்காபுரம் மகளிர் இல்லச் சிறப்பு மலர் – 1992

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேக மலர் – 1997

பத்துச் சொற்பொழிவுகள்
*அறநிதிய வெளியீடு – 1988*
*( மறுபதிப்பு ) – 1999*

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
*பவளவிழா மலர் – 2000*

கந்தபுராணச் சொற்பொழிவு ( மறுபதிப்பு )
*கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி – 2000*

" தங்கத் தலைவி " கல்விப் பணிப்பாளர்
*திருமதி கோகிலா மகேந்திரன் – 2000*

Kingdom of Durgadevi Mr. V. T. Cumarasamy

சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலக
*திறப்புவிழா மலர் – 2002*

" பெண்மைக்கும் இணையுண்டோ "
*கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி – 2001*

" அருள் ஒளி " ( மாதாந்த சமய சஞ்சிகை ) – 2002

" வாழும் வழி " ( திருத்தப் பதிப்பு )
*கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி*
*" மணிமேகலைப் பதிப்பகம் " – 2003*

உ

தேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை

### *தர்மகர்த்தா சபை*

**துர்க்காதுரந்தரி, கலாநிதி**
**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
*(தலைவர்)*

**திருமதி ம. இராமநாதன்**
**திரு. பா. பாலகாங்கேயன், U. S. A.**
**திரு. க. ஜனநாயகம், U. K.**
**திரு. நா. திருநாவுக்கரசு**
**திரு. அ. சிவபாதசுந்தரம்**
**Dr. ந. புவனேந்திரன், U. K.**
**திரு. நா. தவநாதன்**
*(நிர்வாகச் செயலாளர்)*

**திரு. அ. சண்முகநாதன்**
*(நிர்வாகப் பொருளாளர்)*

### *நிர்வாக சபை*

**துர்க்காதுரந்தரி, கலாநிதி**
**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P**
*(தலைவர்)*

**திரு. மு. சபாநாதன், J. P. U. M.**
பதில் நீதிபதி
*(உப - தலைவர்)*

**திரு. ந. செல்வநாயகம்**
*(உப - தலைவர்)*

**திருமதி ம. இராமநாதன்**
*(பொதுச் செயலாளர்)*

**திரு. நா. தவநாதன்**
*(நிர்வாகச் செயலாளர்)*

**திரு. அ. சண்முகநாதன்**
*(பொருளாளர்)*

**திரு. சு. ஏழூர்நாயகம்**
*(உப - பொருளாளர்)*

**திரு. சி. அருளானந்தசிவம்**
**திரு. ச. ஆறுமுகநாதன்**
**திரு. ச. விநாயகரத்தினம்**
**திரு. சி. குமாரசாமி**
**திரு. நா. தவமணிநாயகம்**
**திரு. மு. அருளையா**
**திரு. ச. கந்தையா**
**திரு. சு. முருகையா**
**திரு. ஆறு. திருமுருகன், B. A.**
**திரு. சி. புஸ்பநாதன்**
*(கொழும்புப் பிரதிநிதி)*

**திரு. வி. பாக்கியநாதன்**
*(தெ. இ. இ. சங்கப் பிரதிநிதி)*

# துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பணிபுரிவோர்

**குருமார் விபரம் :**

சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
சிவஸ்ரீ. வா. அகிலேஸ்வரக் குருக்கள்
பிரம்மஸ்ரீ. சு. சுந்தரராஜசர்மா
பிரம்மஸ்ரீ. கி. கணேசமூர்த்திசர்மா
சிவஸ்ரீ. சு. செந்தில்ராஜக்குருக்கள்
சிவத்திரு. சி. ஈஸ்வரதாஸ் ஐயா

**அலுவலகம் :**

திரு. கா. சிவபாலன்
திரு. வி. நடராசா
திரு. வி. சிவகுமாரன்
செல்வி த. மஞ்சுளா
திருமதி சி. தவனேஸ்வரி

**உட்கோயில் பணி :**

திரு. வை. கணேசானந்தம்
திரு. பொ. பாலகுமார்

**மங்கள வாத்தியக் கலைஞர் குழுவினர் :**

நாதஸ்வர வித்துவான் திரு. இ. இந்திரகுமார் குழுவினர்
மல்லாகம்

**பூமாலை அலங்காரம் :**

திரு. வ. பஞ்சலிங்கம் பிள்ளைகள்

**வெள்ளை கட்டல் :**

திரு. சி. சின்னத்துரை குழுவினர்

**சிற்றூழியர் :**

திரு. வ. கந்தையா
திரு. கி. கிருஸ்ணகுமார்
திரு. வீ. குணசேகரம்
திரு. நீ. நாகமுத்து
திரு. க. நாகர்
திரு. நா. கந்தர்

**கோசாலைப் பணி :**

திரு. வே. பாக்கியமுத்து
திரு. பொ. தியாகராஜா

**அன்னதானப் பணி :**

திரு. க. பாலசிங்கம்
திரு. ஜெகதீஸ்வரன்
திரு. க. குணசேகரம்
திருமதி கா. மகேஸ்வரி
திருமதி தீ. இந்திராணி
திருமதி சு. லோகேஸ்வரி

**பாதுகாப்புச் சேவை :**

திரு. க. சிவபாதசுந்தரம்
திரு. மா. சிவகுலம்

**ஆய்வு நூல்நிலையம் :**

அருட்சகோதரி ஜதீஸ்வரி
திருமதி பாலசிங்கம்

**அறநெறிப் பாடசாலை :**

செல்வி கா. கந்தையா
செல்வி ரெ. கிருஸ்ணவேணி
செல்வி ஸ்ரீ. கலைவதனி

**மகளிர் இல்லப் பணியாளர்கள் :**

செல்வி கா. கந்தையா
செல்வி பெ. செல்வராணி
செல்வி சு. சுகந்தினி
செல்வி மென்னா
திருமதி இ. பரமானந்தம்
செல்வி ஸ்ரீ. கலைச்செல்வி
திருமதி சி. தேவி

**துர்க்காபுரம் அன்னையர் இல்லம் :**

திருமதி வே. சுந்தரம்
செல்வி அ. கருணாதேவி
திருமதி சு. செல்லம்மா
செல்வி சி. மங்கையற்கரசி
திருமதி து. தவமலர்


**திருமகள் அழுத்தகம் :**

திரு.ச. இராசரத்தினம்
திரு. ச. உமாசுதன்
திரு. க. வைத்திலிங்கம்
திரு. சோ. யோகேந்திரம்
திரு. ந. பரமேஸ்வரன்
திரு. க. குகதாசன்
திரு. ந. விக்கினேஸ்வரன்
செல்வி செ. நாகராணி
செல்வி இ. வனிதாராணி

**நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் :**

திரு. வி. கமலநாதன்
திரு. செ. கதிர்காமநாதன்
திரு. சி. சண்முகானந்தம்

# செல்வச் சந்நிதி ஆலயம்



அன்னதானக் கந்தா!
அன்பு தரும் வேலா!
உன்னைத் தினம் நாடும்
அன்பர் மனம் கோடி
அனைவர் துதிப்பதும்
உனதன்புச் சந்நிதியே.






Cover Printed By [illegible] Press, Nallur